REGD. M. 4642,

# திராவிடநாடு

மலர் 6 | 20—7—47 | இதழ் 8

## நாட்டு நிலை

### அன்றும்

புதரிலே பதுங்கிக்கிடந்த புலியின் வால் சுழன்றது. கண்கள் அகன்றன. செவியைச் சிலிர்த்துக்கொண்டு எழுந்தது ஒளிந்து கொண்டிருந்த வேட்டைக்காரன் தன்தோழனிடம் "சரி, கிளம்பு மடுவுக்கு அங்குதான் புலி புறப்படுகிறது" என்றான். தோழன், "மடுவுக்குப் போகிறது என்பது எங்ஙனம் தெரிந்தது" என்று வினவ, வேட்டைக்காரன் கூறினான், "மடுவிலே எதுவோ மிருகம் நீர் குடிக்கிறது. அந்தச் சத்தம் புலியின் சிலிர்த்த செவியில் புகுந்தது. அதுவும் புறப்படுகிறது" என்றான்.

### இன்றும்

நல்ல வெப்பம். புரண்டு புரண்டு செல்கிறான் அவன். அடிவயிற்றிலிருந்துவருகிறது அவனது "கோவிந்தா" எனும் கூக்குரல். நெற்றியின் நாமம் வியர்வையால்குழைந்து ஒழுகுகிறது. "ஐயோ!பாபம்! திருப்பதி வெங்கடேசருக்குப் பிரார்த்தனை செய்து கொண்டான் போலும்" என்று வெள்ளை உள்ளத்தார் கூறுவர். பகுத்தறிவுவாதிதான் அவனது புரட்டை விளக்கமுடியும். "அவன் போடும் கூச்சல் சாமிக்கு அல்ல! சோற்றுக்கு! மிகுந்த அரிசி மாலையிலே மதுக் கடைக்கே செல்லும்" என்பான்.

14-ம் பக்கத் தொடர்ச்சி

ரோமாபுரி சக்ரவர்த்திக்கு திராவிடநாட்டு ஆடை வழங்கப்பட்டதாக, சரித்திரச்சான்று இருக்கிறது. ரோம், கிரீஸ், சிங்களம், முதலிய பல்வேறு நாடுகளில் திராவிடநாட்டு வர்த்தகம் ஓங்கி வளர்ந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. தமிழ் காப்பியங்களில், இதற்கான சான்றுகளைப் பரக்கக் காணலாம்.

பிறகும், திராவிடநாட்டு வர்த்தகர்கள் உள்நாட்டு வெளிநாட்டுவியாபாரம் பொன், வெள்ளி, இரும்பு முதலிய உலோகவியாபாரம்,தானிய வியாபாரம், ஆடைகள் ஜவுளி வியாபாரம் மற்றுமுள்ள சகலவிதமான வர்த்தகங்களிலும் தலை சிறந்துவிளங்கினர்கள்.

30 ஆண்டுகளுக்கு முன்பு வட்டி வியாபாரம் முதற்கொண்டு நம்மவர் கையிலேயே வர்த்தகம் இருந்தது. இதனல் நம்நாட்டுச்செல்வம் நம்நாட்டுக்குப்பயன்பட்டு, நம்நாட்டுப் பண்டங்கள் நம் நாட்டின் மக்களுக்கு உபயோகமாகி நம்நாட்டில் செழுமை இருந்தது.

ஆனல், திராவிடநாடு பிரிட்டிஷ் இந்தியாவோடு பிணைக்கப் பட்டு விட்டபிறகு, திராவிடநாட்டு வர்த்தகத்துக்கும் அழிவு ஏற்பட்டு வெளிநாட்டுவியாபாரிகளுடன், வடநாட்டு மார்வாடி, குஜராத்தி, பனியாக்கள் முதலியவர்களும் திராவிட நாட்டில் புகுந்து, இங்குள்ள பலவிதமான வியாபாரங்களையும் தாமேகைப்பற்றி சகலவிதமான இலாபங் களையும் அடைந்து, தமது வெளிநாடு ஆரிய நாட்டுக்குச் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டுபோக இங்கு வியாபாரிகள் தமது பண்டைப்பெருமை செல்வம் செல்வாக்கு இழந்து,மேன்மைபோய் ஒப்புக்கு வியாபாரிகளாய் உயிரற்ற வர்த்தகம் செய்துகொண்டு வருகின்றார்கள். இன்று கணக்கெடுத்துப் பார்த்தாலும் அல்லது சென்னைமுதலியநகரங்களை ஒருமுறை சுற்றிப் பார்த்தாலும் வடநாட்டு ஆதிக்கம் வியாபாரத்துறையில் எவ்வளவு தூரம் வளர்ந்து நம் நாட்டு வியாபாரம் எவ்வளவுதூரம் நசித்துவிட்டது என்பதும் தெரியும்.

திராவிடநாட்டு மக்கள், வெளிநாடுகளில் சென்று கூலிகளாக வாடி வதங்க, இங்குவரும் மார்வாடிகள், குஜராத்திகள், வெளிநாட்டார்கள் இங்கு முதலாளிகளாகி, தம் நாட்டுக்குக் கோடி கோடியாகப் பொருளைக்கொண்டு செல்கிறார்கள்.

நாகரிகம் ஆரம்பித்த காலத்திலே நெசவுத்தொழிலில் திறம் பெற்று விளங்கிய திராவிடநாட்டில் இன்று நெசவாளிகள் படும் கஷ்டம், வெளிநாட்டு வடநாட்டு மில்முதலாளிகள் இங்கு தமது மில்ஜவுளியைக் கப்பல் கப்பலாய், வண்டி வண்டியாய்க் குவித்து வியாபாரம் செய்வதால் தான் இங்கு பஞ்சு,பட்டு,ஆடைகள் பழம்பெருமை கொண்டனவாயினும் அவைகளை ஆதரிக்க ஆளில்லாமல் போய்,பம்பாய்,ஆமதாபாத், ஷோலாபூர், கான்பூர், முதலிய வடநாட்டு ஆடைகளுக்கே திராவிடநாடு மார்க்கட்டாகிவிட்டது. இந்த ஒரு வியாபாரத்தை வடநாட்டார், வெளிநாட்டார் பிடித்துக்கொண்டதால் எவ்வளவோ கோடி ரூபாய்கள் திராவிடநாட்டைவிட்டு வெளியே போய்விடுகிறது. திராவிடநாட்டு வியாபாரிகள் எவ்வளவோ பேர் நசித்துவிட்டனர். திராவிடநாட்டுத் தொழிலாளர்கள் எவ்வளவோ கோடிபேர் வேலையற்றுத்தவிக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன். இப்போது வெளிநாட்டு, வடநாட்டு ஜவுளிகளை இங்கு வரவொட்டாது தடுக்க சட்டம் செய்ய இப்போது நமக்கு அதிகாரமில்லை. ஆனல் தனி நாடாகத் திராவிடநாடு பிரிந்தால், வெளிநாட்டு, வடநாட்டு ஜவுளிகள் இங்கு வந்து குவிந்துநம்நாட்டுஜவுளி வியாபாரம் நசிக்கும் கொடுமையைப் போக்க,நாம்வெளிநாட்டுவடநாட்டுத் துணி இங்கு வரவொட்டாதுதடுக்க சட்டம் செய்ய நமக்கு அதிகாரம் கிடைக்கும். நாட்டுத்தொழில் பாதுகாப்புக்கு வேண்டியசட்டம், சௌகரியம்செய்துகொள்ள முடியும்.

இந்தக் கொடுமைகள் ஒழிந்து நம் நாட்டுச் செல்வம் வெளிநாட்டுக்குப் போகவும், இங்கு வறுமை தாண்டவமாடவும், இருக்கும் கொடுமைநீங்கி, திராவிடநாட்டு வியாபாரிகள் தலை சிறந்து மேன்மையுடன் வாழ ஒரே வழிதான் உண்டு.

அதுதான் திராவிடநாட்டைத் தனி நாடாகப் பிரித்துக்கொள்வது.

இந்தப் பிரிவினை ஏற்பட்டு விட்டால்நம் நாட்டு வாணிபம், வெள்ளைக்காரிடமும் சரி, வடநாட்டாரிடமும் சரி போகாது நம் நாட்டுப்பணம் பாழாகாது, இங்குள்ள செல்வம் இங்குள்ளவருக்கே பயன்படும். வர்த்தகர்கள் மீண்டும் சிறப்புடன் வாழமுடியும். எனவேதான், திராவிடநாட்டை வெளி நாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுவித்துப், பிரித்துத் தனி நாடாக்க வேண்டுமென்ற கிளர்ச்சியை வலுப்படுத்தி வெற்றிகாண வேண்டும்.

## ஆரியக் கிருஹத்தில்

''சுவர் இருந்தாலன்றோ சித்திரம் எழுத முடியும்! உயிர் இருந்தாலன்றோ, உயர்வு, வெற்றி, எதுவும். ஏ! பிரியே! என்னைக் கொல்ல வரும் இவனிடம் சென்று அடிபணி! தாமரைத் தடாகம் போன்ற கண்ணிலிருந்து நீரைப் பொழியவிடு! மாங்கலியப் பிச்சை கேள். அவன் வேண்டுவதை எல்லாம் தருவதாகச் சொல். நம்மை உயிரோடு விட்டு விட்டால் போதும். கோடி கோடி புண்ணியமுண்டு எனக்கூறு! போ, போ, விரைந்து செல். புலம்பு! புறப்படு!''

## தமிழர் மனையில்

''வாளாயுதத்தினுல் காயம் அடைந்துள்ள, வீரம் செறிந்த என் கணவர் இங்கே படுத்திருக்கிறார். அவரது அங்கமெல்லாம் தையல்கள் காணப் படுகின்றன! பாடகரே! தயவுசெய்து வீராவேசம் ததும்பும் தங்களுடைய போர்பாட்டுகளை நிறுத்துங்கள்; இல்லையேல், புதிதாக ஏற்படும் மனப்புண்களுடன், யுத்தகளத்துக்கு அவர் ஓடி விடுவார்!''

✲


# "திராவிடன்"

தமிழ் வார வெளியீடு.

ஆசிரியர்

தோழர் என். வி. நடராஜன்

ஆகஸ்டு முதல் ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆண்டுக்கு ரூபாய்

**3—8—0**

தனிப்பிரதி அணு 1.

**'திராவிடன்' அலுவலகம்,**

6. சுங்குராம செட்டித்தெரு,

சென்னை.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா **திராவிடநாடு** ஆண்டுசந்தா ரூ 7

# ஏன் எதிர்ப்பு?

—(o)—

மதத்தலைவர்கள் பிரபல மிராசுதாரர்களையும், பென்ஷன் பேர்வழிகளையுமாகப் பிடித்திழுத்து, "கேண்மின் சீடகோடிகளே! இனி நீவிர், நமது மதப்பிரசாரம் புரியுங்கள். யாகம், யக்ஞம், யோகம் முதலியன நடைபெறும்படி பார்த்துக்கொள்ளுங்கள்" என்று ஆக்ஞை இடுகின்றனராம்!

இவ்விவிதம் சனாதனப் படை திரட்டுவது கண்டு நாம் அவர்மீது காயவில்லை. இத்தகைய 'பேச்சுக்கு' நாட்டிலே இன்னமும் இடமிருக்கிறதே, இவைகளை எடுத்துப்போட்டு விளம்பரந்தந்து உடந்தையாக இருக்கும் பத்திரிகைகள் உள்ளனவே, இப்பத்திரிகைகள்தானே சுயராஜ்யசூரர்களின் உடுக்கையாக உள்ளன. இந்நிலையில் நாடு முன்னேறுவது எப்படி? என்றே கவலைப்படுகிறோம்.

நாட்டிலே இப்போதுதான் ஒருவித விழிப்பு, கொஞ்சம் பகுத்தறிவு காரணங்காண விரும்பும் மனப்பான்மை, புத்துலக உணர்ச்சி, கிளம்பி இருக்கிறது. மூடநம்பிக்கைகளும் குருட்டுப்பழக்க வழக்கங்களும் குறைந்துகொண்டு வருகின்றன. எதனையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுச்சி பெற்று வருகிறது. பிறவியின்பேதம் எதிர்க்கப்படுகிறது. வைதிகக் கோட்டைதகர்ந்து வருகிறது, பார்ப்பனியம் பயந்து வாழுகிறது. புரட்சி வலுக்கிறது. புத்துணர்ச்சிபூக்கிறது.

ஆனால், வயலில் பூத்துக்கண்கவர் வனப்புடன் விளங்கும் மலர்களின் மீது, தனது முரட்டுக்காலைவைத்து மிதித்து, மலரைத்துவைத்து கீழே புதைந்து சேறுடன் சேறாகிவிடும்படி செய்யும் எருமைகள்போல இப்போது சனாதனம், வர்ணாஸ்ரமம் என்ற பேச்சுப்பேசி, முளைத்தெழும் பகுத்தறிவைப்பாழாக்கும் 'பாவிகள்' முனைந்து நிற்கின்றனர். நாட்டின் கவனம் வேறு பக்கம் திருப்பப்பட்டு இளைஞர்கள் எண்ணத்தை இந்நாசகாலர்கள்மீது செல்ல ஒட்டாதபடி தடுத்து தேசியக்கூட்டம் 'துரோகம்' செய்கிறது.

இந்நாட்டிலே பெரிய பெரிய அறிவாளிகள் மேல்நாட்டுப் படிப்பில் மிளிருவோர், உலகச்சுற்றுப்பயணம் செய்தோர், விஞ்ஞான பட்டதாரிகள் உள்ளனர். அரசியல் துறையிலே அதிதீவிரவாதம் புரியும் சூரர்கள் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் தமது சிறுவிரல்கொண்டு அசைக்கவில்லை 'நில்லு' எனச் சொல்லவில்லை, அவர் சூழ்ச்சியைப் பார்ப்பனியம் கூடாது என்று துணிந்து சொல்லமுன்வரவில்லை. அரசியலில் தீவிரம் பேசிக்கொண்டு சமுதாய விஷயத்தில் பச்சை வைதிகத்துக்கு, பாழும் பார்ப்பனியத்துக்கு நாட்டையும் மக்களையும் காட்டிக்கொடுக்கும் கூட்டம் பெருகிவிட்டது.

இளைஞர்களையே எதிர்கால சிற்பிகள்என்பர். அவர்கள் இதனைஒப்புகின்றனரா என்று கேட்கிறோம். இந்தப் பழமைக்குப் புத்துயிர் தரும் பாதகச்செயலைக்கண்டு அவர்கள்நெஞ்சம் துடிக்கவில்லையா? மனம் பதறவில்லையா! இந்நிலையில் நாடு இந்த ஆண்டில் இருப்பதுகாண, வெட்கமில்லையா! என்று கேட்கிறோம்.

வர்ணாஸ்ரமம் நிலைக்க வேண்டுமாமே! செய்யாதுவிடின்உலகிலுள்ள ஜீவராசிகளுக்கெல்லாம் கேடு சூழுமாமே. ஒப்புக்கொள்கின்றனரா நமது இளைஞர்கள் இதனை என்று கேட்கிறோம். ஒப்பவில்லை எனில், இந்த முறையை நிலைநாட்ட முனைந்து வேலை செய்ய முத்ராதிகாரிகளின் படை திரட்டப்படுகிறதே, ஒரு சங்கராச்சாரி ஊர்சுற்றி வந்து உழைக்காது, பாடுபடாது உல்லாச வாழ்வு வாழ்ந்து, ஊரை ஏய்க்கும் தந்திரத்தை 'உச்சாடனம்' செய்து பண்டைநாட்களில் நடந்து வந்த முறைகள்நடக்கவேண்டும்எனப்பயம் பதைப்புஇன்றிப்பகிரங்கமாகச்சொல்லித்திரிகின்றாரே கேட்டனரா இளைஞர்கள்?

பகுத்தறிவைப் பாழாக்கி மனிதத்தன்மையை மாய்த்து, பார்ப்பனர் தவிர மற்றையோரின் மானத்தைப் பறிக்கும் திட்டம் வகுத்தமனுவுக்கு வக்காலத்து வாங்கிப்பேசும் வம்பர் கூட்டத்தை அடக்கினரா? வாய் சலிக்கமட்டும்பேசுகின்றனர். ஆனால் சமுதாயத்தின் பழையசாக்கடையில் மக்கள் புகவேண்டும் எனச்சங்கராச்சாரி சாற்றுகிறாரே, இதனைக்கண்டித்தனரா!

யாகமாம்! யோகமாம்! யக்ஞமாம்! இவைகளைப் பிராமணர்கள் செய்ய வேண்டுமாம்!

தெரியாதா, வெட்கக்கேடான இவர்கள் கதை?

ஆற்றருகே, அழகிய தோப்பிலே பர்ணசாலை அமைத்துக்கொண்டு, தென்றல்வீச, தேன் அமுதுண்டு, தேவர்களின் பிரதிநிதியாகப் பிராமணர்கள் வாழ்ந்து, மற்றை வகுப்பார் மாடுபோல் உழைத்து, அகில் சந்தனம் கட்டைகளாகத்தந்து, ஆடு மாடு, மான்களை யாகத்துக்கு உதவி, பண்டம் பதார்த்தம் பால் பரிவுடன் தந்து, பாதபூஜை செய்து வாழ்ந்த காலமுண்டு, விஷயமறியாது வலையில் வீழ்ந்த அம்மக்களை விண்ஒளியைக் காட்டியும், விசித்திரம் புரிந்து மயக்கியும், மோட்சம் என்று கூறி ஏய்த்தும், நரகம் எனச்சொல்லி மிரட்டியும், அடக்கி ஒடுக்கி ஆண்டனர், பார்ப்பனர் ஒருநாள்.

அக்காலத்தில்தான் யாகம் விதவிதம்!

அஜமேதயாகமும், அஸ்வமேத யாகமும், நரமேதயாகமும், மிருத்யூ நாசயாகமும்செய்துகொண்டு,மேனி சிவந்து, தொந்தி பெருத்து, மேதினியில் பார்ப்பனர் வாழ்ந்து, மான், பசுங்கன்று, பன்றி இறைச்சி முதலிய இறைச்சி வகைகளை உண்டு, சோமபானம் பருகி சொக்கி, சொகுசாக பௌண்டரீக யாகம் எனும் லீலைகள் புரிந்து காட்டிஉள்ள பொருள் பொன் பெண் யாவற்றிற்கும் தாமே கர்த்தாக்கள் எனப் புகன்று தோள்வலிமை கொண்டவரின் மனவலிமையை முற்றும் மாய்த்து, மன்னாதி மன்னரும் அடிபணிய, "குடி! குடி! வெறிக்க வெறிக்கக் குடி! மயங்கிக்கீழேவிழும் வரையில் குடி! மாதர் வகையில் மாதா நீங்கலாக மற்றவரைக்கூடு" என்று கூறும் "மகாநிர்வாண தந்திரம்" கற்று அதன்படி நடந்து மதோன்மத்தர்களாக வாழ்ந்தனர்.

எத்தனை ஜாலியன் வாலாபாக்குகள் இங்கு முன்னாளில் நடைபெற்றன. எத்தனை எத்தனை ஆயிரம் டயர்கள், அம்மம்மா! எண்ணினால் நெஞ்சு வேகும். நினைப்பு அத்தனையும் மாறும்! ஜாலியன் வாலாபாக்கைக்கண்டித்தோம். டயரைத்தூற்றினோம்! ஆனால் முன்னாளில் நடந்த ஜாலியன் வாலா பாக்குகளை, படுகொலைகளை நாம் ஜபதபாதிகள்என்று அனுமதித்தோம். முன்னாள் டயர்களை முடிசூடா மன்னராக,மோட்ச வழிகாட்டிகளாகக் கொண்டோம்! கெட்டோம்!

கேளுங்கள் நண்பர்களே!மனு கூறி அன்று பார்ப்பனியம்அமுல்நடத்திப் பகுத்தறிவால் சாய்ந்து, இன்று சங்கராச்சாரியாரால் தூக்கிவைக்கப்படும், சூத்திரர் கடமை, நிலை எது?

பிராமண பூஜைதான்!

நம்மவர் மானம் எவ்விதத்தில்பறிக்கப்பட்டது என்பதை எண்ணிப் பாருங்கள். மனு அத்தியாயம் 8 சுலோகம் 365ல், "ஒருகன்னிகை போக விருப்பத்தினால் உயர்ந்த ஜாதிப்புருஷனைச் சேர்ந்தால்அவளைக் கண்டிக்கக் கூடாது" என்று கூறிவிட்டு, அதேஅத்தியாயத்தில் 374ம் சுலோகத்தில், 'சூத்திரன் காவலில்லாத பிராமணப்பெண்களைப் புணர்ந்தால் அவன் அங்கத்தை அறுத்துவிடு" எனக் கட்டளையிட்டான்.

கண்களில் இரத்தநீர் பெருகவில்லையா இந்த கர்ணகடூரமான சட்டத்தைக்கேட்க, என்று கேட்கிறோம்.

"சூத்திரன்" கொல்லப்பட்டால், என்ன தண்டனைதெரியுமோ?"பூனை, அணில்,கோட்டான், காடை,தவளை நாய், உடும்பு, காக்கை இவைகளில் ஒன்றைக்கொன்றால் செய்யவேண்டிய பிராயச்சித்தம் யாதோ அதைச் சூத்திரனுக்கும் செய்க" என்றுமனு அருளுகிறார்!

இந்நிலையில் நாம் இருந்தோம்! சங்கரர் கூறும்யாகயோகயக்ஞம்செய்துகொண்டு அவர்கள் வாழ்ந்தனர்.

ஹோமத்தில் என்ன கண்டனர் அவர்கள்!

மனு அத்தியாயம் 3 சுலோகம் 257ல் ஹோமத்திரவியங்களைக்குறிப்பிடுகிறார். யாவை? 'செந்நெல்லின் சோறு;பசுவின்பால்,சோமபதையின் சாறு, தீ நாற்றமற்ற இறைச்சி, இவைகள் அவிசுகள்' அதாவது ஹோமத்திற்குரியன.

அம்மட்டோ? மதுபர்க்கம் எனும் பண்டமும் அவர்களுக்குண்டு. அப்பண்டம் யாது? மாட்டிறைச்சியை நெய்யில் வேகவைத்துத் தேன்கலந்து செய்யும் சிற்றுண்டி.

இதுதான் மறைந்துபோன மகாத்மியம்; இதனை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்றுதான், ஜகத்குரு கூறுகிறார். இதற்குத்தான் முத்திராதிகாரிகள் கிளம்பியுள்ளனர்.

முன்னாளில் இந்நிலை இருந்துபிராமணபூஜை குறைவர நடந்து, யாகம் யக்ஞம் சரிவர நடந்ததே அதனை எதிர்த்துப்புரட்சி புரிந்து சூத்திரர்களைச்சூத்திரத் தன்மையினின்றும் மீட்க விரும்பியவர்களே அரக்கர் என்று ஆரியர்களால் அழைக்கப்பட்டனர். நம்மவரைக்கொண்டே நம்மவரை வீழ்த்தினர்.

ஆனால் பெரியதொரு புயல்கிளம்பிற்று, தோப்புகளிலிருந்த மரங்கள் ஆடின. பர்ணசாலைகள் காற்றில் பறந்தன. யாககுண்டங்கள் அழிந்தன, ஹோமத்தீ அணைந்தது. தர்ப்பை தவித்தது. பார்ப்பனர் பதுங்கினர், வந்தது புத்துலக உணர்ச்சி. மேனாட்டு வாடை வீசிற்று, அதன் வேகத்தின் முன்பு யோகம், யாகம், யக்ஞம், ஜபம், தபம், எல்லாம் பறந்தன பஞ்சு போல!

கேட்கும் ஆட்கள் கிளம்பிவிட்டனர்.

யாகமும் யோகமும், கிளைவையும், வெல்லெஸ்லியையும் தடுக்கவில்லை.

அஜமேத யாகம், ஆடு தின்ன உதவிற்றே தவிர ஆங்கிலேயனை விரட்ட முடியவில்லை! ஹோமப் புகை துப்பாக்கி வேட்டுப் புகை முன்பு மாயமாய் மறைந்தது.

சங்கராச்சாரிகளின் பீடம் அக்காலத்தில் காலியாக இல்லை. அந்தக் காலத்தில் ஒருயாகம் செய்து வெள்ளையனைத் தடுத்திருக்கக்கூடாதோ. வெள்ளையன் வேதமறியாத நீசன்! என்றனரே, ஒரு வேள்வி செய்து அவனை விரட்டி இருக்கலாகாதோ, பிராமணர்கள் பூதேவர்களாயிற்றே, ஏன் வெள்ளையன் வந்ததும் கடையைக் கட்டிக்கொள்ளத் தொடங்கினர்.

எங்கே அந்த யாகயோக பலம்? திராவிடப் பெருங்குடி மக்களைஏய்க்கப்போட்ட தவவேடம் என்னவாயிற்று? மக்களை மிரட்ட எழுதிவைத்துக்கொண்ட ஏடுகளில்காணப்படும் பாசு பதாஸ்திரம், வர்ணாஸ்திரம், வாயுவாஸ்திரம், அக்கினியாஸ்திரம், மோகனாஸ்திரம், இந்திராஸ்திரம், ராமபாணம், திரிசூலம், தண்டம், கதை, மாகாளிவாள், இவைகள் எங்கே போயின?

இத்தனையும் பொய் என்பதை மேனாட்டுப்படை எடுப்பும், அத்துடன் கலந்துவந்த புத்துலக வாடையும் காட்டி, மக்களை விழிப்படையச் செய்தது.

பிறகே மக்கள் கண்டனர் யாகம் யோகம் என்ற பேச்சு பார்ப்பனர் போக போக்கியத்துடன் வாழவேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் சூது என்பதை. பிறகே அறிந்தனர் யாகம் தெரியாத பிரிட்டன்,பிரான்சு அமெரிக்கா முதலிய வல்லரசுகள் வாழ்வதை. ராபர்ட்கிளைவ் துப்பாக்கியுடன் வந்து நாட்டைப் பிடித்தானே தவிர, தாமரைக்குளத்தருகே தனி இடம் அமைத்துத் தவம் செய்ததால் அல்ல என்பதை. தெரிந்தது மக்களுக்குப் பார்ப்பனியக் கொடுமை. கண்டனர் மக்கள் சரஸ்வதி பூஜை உள்ள நாட்டிலே 100-க்கு 90 பேர் தற்குறிகளாகவும், லட்சுமி பூஜை செய்யும் நாட்டிலே தரித்திரம் தலைகோலமாக ஆடுவதையும்,சக்திபூஜை செய்யும் நாட்டிலே சக்கைகள் எனும் மனிதப் பிண்டங்கள் வாழ்வதையும் இவைகள் இல்லாத, தெரியாத நாட்டிலே, இன்பம் பெருகி இருப்பதையும். எனவேதான் பார்ப்பனியத்தை எதிர்த்தனர்.

# ஏழை—எரிமலை!

—●—

மக்களின் கோபம், மன்னனை என்ன செய்யமுடியும்?

மன்னன், எவ்வளவு கொடுமைப் படுத்தினாலும் மக்கள், மனம் நொந்து சபித்தாலும், அரசாளப் பிறந்தவன், ஆண்டுகொண்டுதானே இருப்பான்!

ஆண்டவன், அரசனைப் பிறப்பிக்கிறான்! அரசனை எதிர்த்தால், ஆண்டவனின் ஏற்பாட்டை எதிர்ப்பது என்றாகும். தேவநிந்தனை, பெரும் பாபம்.

கொடுங்கோல் மன்னன் வாழ்கிற நாட்டைவிடக் கடும்புலி வாழ்கிற காடே மேல். அவ்வளவுதான், செய்யமுடியுமே தவிர, வேறு என்ன செய்ய இயலும்?

மன்னனுக்கு அடுத்தபடி, சீமான்கள்! அவர்கள், இலட்சுமிபுத்ரர்கள்!!

பெரும் புண்யவான், மன்னனாகிறான்! சாதாரணப் புண்யவான்கள், சீமான்களாகின்றனர்! ஆக, இருவரும் இறைவனின் அருளைப்பெற்றவர்களே!

மக்களின் வாழ்வின் மீதோ, பாப மூட்டைகள் தான், வறுமை, நோய், வேலையில்லாக் கொடுமை என்ற உருவிலே உள்ளன. அவர்கள், 'அடுத்த ஜென்மத்தி'லாவது நல்வாழ்வு கிடைக்க வேண்டுமென்று நாதனை வேண்டுவதன்றி, வேறுவழி இல்லை. என்று வெளிப்படையாகவே பேசினர் முன்பெல்லாம்.

சீமான்கள்! தனிரகம்! மன்னனுக்காவது, வார்சுகளின் தொல்லை, வெளிநாட்டு வேந்தரால் ஆபத்து ஏற்படும். இவர்களுக்கோ, இவ்வகை ஆபத்தும் கிடையாது. இன்பவாழ்வு! மதுஉண்டு, அதை ஊற்றித்தர மங்கை உண்டு, மங்கையர்க்கு அழகு உண்டு, அதை அழிக்கும் வல்லமை சீமான்களுக்கு உண்டு! அவர்களின் மாளிகைகள், கலை கொஞ்சும் இடமாயிற்று! கலைவாணர்களோ, அவர்களுக்குக் கட்டியம் கூறிப்பிழைப்பவர். கவிவாணர்கள் புகழ்மாலை சூட்டுவர். காமக்கிழத்தியர், தமது காமம் சுக்கும் கண்களான கெண்டையைவீசி, சீமான் வர்க்கத்தினரான விரால்களை இழுப்பர். ஒரே கோலாகலமான வாழ்வு!

இந்தக் கோலாகல வாழ்வுக்கான வசதிகளைத் தேடித்தர, ஒவ்வோர் சீமானிடமும் ஆயிரக்கணக்கில் ஆட்கள் இருப்பர். அவர்கள் கழனிகளில் மாடுகளாவர், மாளிகை வாயலில் நாய்களெனக் காத்துக்கிடப்பர். வறுமை கொட்டும்! அதைவிட அதிகமாக, சீமான்கள் என்ன செய்வரோ என்ற அச்சம் அவர்களைப்பிடித்தாட்டும். கைகட்டி வாய் பொத்திநிற்பர் அவர்கள். சீமான் கேட்கும் போதெல்லாம், வரிதரவேண்டும். சில வேளைகளில் அபராதம் தரவேண்டும். வேறு சில வேளைகளில் சீமான்கள், கிடைப்பதை எடுத்துச் செல்வர், ஏழை ஏதும் கேட்கவே முடியாது. அவர்கள் ஏழைகள் மட்டுமல்ல, கோழைகள்!

ஏழையோ கோழை! சீமானோ உல்லாசமன்றி வேறொன்று அறி



லா, மார்சேல எனும் புரட்சிக் கவி இயற்றியவர்

யான் — விரும்பான். மன்னனோ மதோன்மத்தன்! மன்னன் மனைவியோ, மந்தகாசம் தவிர வேறு ஏதும் விரும்பாதவள்!

புரட்சிக்கு முன்பு, இதுதான் பிரான்ஸ்!

இருப்பது முப்பது ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடம். அதைச் சுற்றி முள்வேலி! அங்குதான், சீமானின் மாளிகை இருக்கும். மாளிகைக்கு அழகுதர, தோட்டம். தோட்டத்துக்கு அழகுதர, சிறுகுளம்—அதிலே சிங்காரிகள்! அவர்கள் நீராடுவர்! அது கண்டு, சீமான்கள் களிநடமாடுவர்! அவர்கள் சிரித்துப் பேசுவர், சீமான் சொக்கிச் சாய்வார்! அவர்களின் அதரம் துடிக்கும், சீமானின் நெஞ்சமோ, அருகே சென்று அவளை அணைத்து முத்தமிடாவிட்டால், தன் நெஞ்சு வெடிக்கும் என்று கூறுவார். சேல்விழியாள், சிற்றிடையாள், வாட்கண்ணாள், சுருண்ட குழலழகி, கிளிமொழியாள், கட்டுக் கடங்காக் கனகப்பந்தினைக்கொண்ட காரிகை, இவ்வண்ணம் இருப்பர்! இந்த இன்பவல்லிகளுடன் கொஞ்சி விளையாடும் சீமானுக்கு, கொல்லைப்புறத்திலே, குமுறிச் சாகும் பணியாள், நோய் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்ன, அது தெரிந்தும் தடுக்கமுடியாதது கண்டு, திகைத்துக் கிடக்கும் தரித்திரவானின் புழுப்போன்ற நிலைமை, இதுவா நினைவிற்கு வரும்.

ஒரு கையில் திராட்சைப் பழக் கொத்தும், மற்றோர் கையில் அதன் ரசம் ஊற்றப்பட்ட பானக் கோப்பையும் ஏந்திக்கொண்டு, கண்கள் சுழல, ஆடை நெகிழ, கூந்தல் புரள, சிற்றிடை துடிக்க, அவள் அருகே நடந்துவந்து, ஆஹா! ஐயோ! அப்பப்பா! போதுமே! இல்லமுமா! முடியவே முடியாது! என்று சரசமொழிகளைப் பொழிகிறபோது, சீமானின் காதிலே, காலமெல்லாம் பாடுபட்டவனின் ஈனக் குரல், குமுறல், அழுகுரல், பெருமூச்சு, ஏறுமா? அவன் ஆனந்தபுரியில்லவோ வாழ்கிறான்! அடிமையின் அழுகுரலைக் கேட்க அவனுக்கு நேரம் ஏது? அழவேண்டியவன் அழுகிறான்! ஆமாம்! கண்களுக்கு நீரைப் பொழியவைக்கும் சக்தி இருக்கும் வரையில்தானே அழப்போகிறான்! பிறகு? கண்களும் வறண்டுவிடும்! உலகம் ஒரே அந்தகாரமாகி விடும்! அவன் மனிதன், என்று வேறு யாரேனும் கவனப்படுத்தியாக வேண்டும் —இல்லையேல், அவன் நடைப்பிணந்தான்! அவன் உழுதவயலிலே பச்சைப்பசேலென பயிர் ஏறி இருக்கும்—அவனுடைய கண்களோ பஞ்சடைந்து இருக்கும்.

● ● ●

"எஜமானர் இருக்கிறாரா?"

"ஏண்டா மூடா! இருக்கிறாரா? என்று கேட்கிறாயே. திமிரா உனக்கு? இல்லாமல் எங்குபோய் விடுவார்?"

"ஒரு மனு..................."

"இன்று அவரைப்பார்க்க முடியாது."

"நாலுநாட்களாக வந்து வந்து போகிறேனே"

"நாயே நாலுநாட்கள் நடந்தால் எனக்கென்ன, நாற்பதுநாட்கள்நடந்தால் என்னடா?" .

* * *

கதவு 'படார்' என்று சாத்தப்படும்! ஏழை, தள்ளாடி மறுபடியும் தன்வீடு அடைவான்! வீடா அது? வேதனைக்கூடம்!

"வந்துவிட்டீர்களா!"

அந்தக்குரலிலே ஆவல் தோய்ந்து இருக்கும்.

ஒருவறண்ட பார்வையை அவன் பதிலாக அளிப்பான்.

"என்ன சொன்னார்?"

"அவரா? நான் பார்க்கவே இல்லையே!"

"ஏன்?"

"அவருக்கு ஓய்வு இல்லையாம்" குடிசையில் இந்தப்பேச்சு நடக்கும்.

ஓய்வு இல்லாச்சீமான்! உண்மைதான் அது! விருந்தளிப்பது, விருந்துக்குச் செல்வது! காமக்கிழத்தியைத்தேடுவது, துரத்துவது! ஒரே வேட்டைமயம்!!

ஆமாம்! ஓய்வு கிடைக்கும்போது அவர், குதிரைமீதேறிக்கொண்டு, மாளிகைக்கு அருகே உள்ள சிறு அடவிக்குச் செல்வார்—முயல்வேட்டைக்கு, மான் வேட்டைக்கு!!

வேட்டை நாய்கள் அவரைப்புடை சூழ்ந்து செல்லும். மது உண்ட மங்கையின் குளறுமொழி அவரைச் சொக்கவைப்பதுபோலவே, அந்த வேட்டை நாய்களின் 'குரைப்புஒலி' யும் அவருக்கு ஆனந்தமளிக்கும். கெம்பீரமாகச் சவாரி செய்வார்! ஒரு முயல் சிக்கினால் போதும், சீமானின் வீரத்தைப் பாராட்டுவர்! மறுதினம் அந்த மகத்தான சம்பவத்தைக் கொண்டாட விருந்து நடக்கும்.

* * *

"அந்த நீல உடைக்காரி!........... யார்?"

"அவளா? நெளியும் அந்த இடையில், என் கரம் நேற்றிரவு..........."

"ஓஹோ! அவள் உன் மதுக்கிண்ணமா?"

"கிண்ணத்தில் மது கிடையாதடா!"

"என்னடா அது?"

"அவளுடைய எழில், தொலைவில் தான்! அருகே நெருங்கினால், அவ்வளவும் வெறும் பூச்சு என்பது தெரியும்"

ஒவ்வோர் புறத்திலே ஒவ்வோர் வகையான சம்பாஷணை — எல்லாம் இன்ப வாழ்வுபற்றியே இருக்கும். சில இடங்களிலே சீற்றமொழியும் உண்டாகும்.

"என் பாதையில் குறுக்கிட்டான். நாளை மாலை நான் அவனுடன் வாட்போர் நடத்தப்போகிறேன்."

"ஏன் வாட்போர்?"

"நான் நேசித்துவந்த நடனசுந்தரியின் மனதை அவன் மயக்கி என் சந்தோஷத்தை அழித்தான். ஆகவே அவன் அழிக்கப்படவேண்டியவன்"

இங்ஙனம் சூள் உரைப்பான் வாலிபமுடுக்குள்ள சீமான். வயோதி



புரட்சியில் போசுங்கிய பிரான்சு மன்னன்.

கனே, "ஆபத்து வந்தால் நான் கவனித்துக்கொள்கிறேன். அரசன்என் கைக்குள்! ஆளைத்தீர்த்துவிடு. அந்தி வேளையில் அருவிப்பக்கம் அவன் தனியாக உலவ வருவது வழக்கம்"— என்று கூறிக் கொலையாளியை ஏவுவான், வேறோர் சீமான் மீது!

* * *

"நாகரிக நகரங்களில் நான் உலவி இருக்கிறேன். நங்கையரை நேசித்திருக்கிறேன். ஒய்யாரிகளுடன்உலவி இருக்கிறேன்—குலவி இருக்கிறேன். ஆனால் ஆரணங்கே! நான் முதன் முறையாக, இருதய பூர்வமாக, காதலிப்பது, உன்னைத்தான்! இது உதட்டு அசைவு அல்ல உள்ளத்தினின்றும் வெளிவரும் உண்மை!"

"காதலிப்பது முதல் முறையா? கட்டுக்கதை!!

"நிச்சயமாக அப்படித்தான் தோன்றும் உனக்கு. உனக்கு மட்டுமா, அனைவருக்கும். நாட்டிய சாலைகளிலே வட்டமிட்டுக்கிடந்த வாலிபன்தானே இவன்! இவனுக்கா இதுவரை காதல் ஏற்பட்டிராது!! என்றே எவரும் எண்ணுவர். கள்ளச் சிந்தனையற்றுக் கூறுகிறேன், கனிமொழியாளே! நான் உன்னைக்கண்ட பிறகே உண்மைக் காதலின் உயர்வைத்தெரிந்துகொண்டேன்! இதுவரை நான் உழன்றேன் — கெட்டு அலைந்தேன்—தீவு நோக்கிப்பறக்கும் சிறுபறவைபோல அலைந்தேன்........"

அதற்குமேல், அவள் அவனைப் பேச அனுமதிக்கமாட்டாள்! முத்து மாலை பரிசளிப்பாள்! அழகும் இளமையும் பலியாகும்!...............புதிய ஜோடி!

இவ்வளவு வேலைகள் இருக்கும் போது சீமான்களுக்கு ஓய்வு ஏது?

அந்த ஏழை சொன்னது சரி! ஓய்வு இல்லை சீமானுக்கு!! ஏழையின் குறையைக் கண்டறிய நேரம் இல்லை! ஆண்டவனுக்கும் நேரம் இல்லை! திகைத்துப் போயிருந்தான் தேவன்!! தன் சிருஷ்டியிலே ஏற்பட்ட அலங்கோலத்தைக் கண்டு!!

ஆண்டவன், அரசாள்பவன், சீமான், யாருக்கும் ஓய்வு இல்லை!

தேவாலயத்திலே திருவிழாக்களுக்குக் குறைவில்லை! அரண்மனையிலே, 'தர்பார்கள்' நடந்த வண்ணம் இருந்தன. மாளிகைகளிலே, விருந்துகள் நித்ய நிகழ்ச்சி! யாருக்கும் ஓய்வு இல்லை!! ஏழை என்ன செய்வான்? என்ன செய்தான்?

ஜூலை 14! அதுதான் அவன் செய்த வேலை! பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான்! ஜெபித்தான்-மண்டியிட்டான் - காலைப்பிடித்தான் - கண்ணீர் பொழிந்தான்-எல்லாம் செய்து பார்த்தாகிவிட்டது.

ஓய்வு இல்லை
நேரம் இல்லை
செய்வதற்கு ஒன்றுமில்லை.

இவ்வளவுதான், அவன் பெற்ற பதில்கள்! மேலால் பேசினால், சவுக்கடி, வேட்டை நாய், ஆளை வேட்டையாடும் அதிகார வர்க்கம்! கொஞ்சம்

கோபமாகப் பேசினால் கத்தி, குண்டு! சிலருடன் கூடிப்பேசினால், அதிகார வர்க்கம்சீறும்!சீறினால்,-பாஸ்ட்டிலி! ஆமாம்! பாஸ்ட்டிலி!! மனிதனைஉயிரோடு வதைக்கும் சிறைக் கூடம்! வாலிபனை வயோதிகனுக்கும் இடம்! திடசித்தமுடையவனைப் பித்தனுக்கும் இடம்!!

இந்நிலையிலே கிடந்தவன், கடைசி வழியைக் கண்டு பிடித்தான்! இல்லை-தவறு! கடைசிப் பாதையில் துரத்தப்பட்டான்! ஜூலை 14!! புரட்சி!!

பல காலமாகக் குமுறிக் கொண்டிருந்த உள்ளம்! எரிமலை நெருப்பைக் கக்கலாயிற்று. எதிர் பாராததுதான்! ஆனால் புரட்சி நேரிட்டபோது, பிரான்சு நாட்டுச் சீமான்கள் நடு நடுங்கினர்.



புரட்சி பவனி வருகிறது.

மன்னனின் அதிகாரம் தானாகவே ஓர் சிக்கலை உண்டாக்கிக் கொண்டது. சீமான்களிடம், மன்னன் வரி பெற முடிவதில்லை! மக்களுக்கோ, வரிப்பளுவைத் தாங்கும் சக்தி இல்லை. நாட்டு வளத்தைப் பெருக்கும் அறிவுக்கு இடமில்லை-சர்க்கார் நிர்வாகமோ, மாடு மேய்ந்த வயலின் நிலை பெற்றது. இது சமயம், வரவு-செலவுத்திட்டத்தைஒழுங்கு படுத்த மன்னன், நிபுணர்களைத் தேடினான். ஒருவர் பின் ஒருவராக வந்த நிபுணர்கள், தங்களின் திறமை, இந்தச் சிக்கு அறுக்க முடியவில்லை என்பதைக் கண்டு, கலங்கினர்.

சர்க்காருக்கு இந்தச் சஞ்சலம். அதே போது ஏழை உலகிலே, மெள்ள மெள்ளப் பரவிய புரட்சிக் கருத்துக்கள் புத்துருவெடுத்தன.

“கிடக்கிறான் தள்ளு!”

“உரக்கப் பேசாதே! தெரிந்தால் அதிகாரம் தாக்கும்”

“வறுமை தாக்கித் தாக்கி வைரம் பாய்ந்தகட்டையடா, இது. வேறு தாக்குதலுக்குப் பயப்படவேண்டியதில்லை. போ”

“போலீஸ் வரும்! பட்டாளம் வரும்! துப்பாக்கியால் சுடுவர்!”

“துப்பாக்கி என்ன செய்யும்? சாகடிக்கும். போடா! முட்டாளே! இப்போது தான் வாழ்ந்து கொண்டா இருக்கிறேன்”

ஏழையின் குரலிலே ஓர் புதுமை! பேச்சிலேயே புரட்சி! பார்வையிலே புரட்சி! ஆம்! அவன் புரட்சி மயமானான். மக்களிடை புரட்சிமனப்பான்மை! மன்னன் மனதிலேயோ மருட்சி!

ஸ்டேட்ஸ் ஜெனரல், எனும் மக்கள் மன்றத்தைக் கூட்ட உத்திரவிட்டான் மன்னன்; நெருக்கடியைத் தீர்க்க.

கூடிற்று! நெருக்கடியைத் தீர்க்க அல்ல, கொடுங்கோன்மைக்கு நெருப்பிட!!

419 வருஷங்களாகக் கூடாத சபை கூடிற்று, 1789-ல். தலைமுறை தலைமுறையாக, மன்னர்கள் எந்த மன்றத்தைக் கூட்டாமல், அசட்டை செய்தனரோ, அந்தச் சபையைக் கூட்டவேண்டிய அளவு நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

மக்களின் பிரதிநிதிகள், சீமான்களின் பிரதிநிதிகள், மத அதிகாரிகளின் பிரதிநிதிகள்—எனும் முப்பிரிவு, இச்சபையில்—ஏர், கோப்பை, ஜெபமாலை! உயிர்பற்றிக் கவலையற்ற வேட்டைக்காரன்—பசியுடன் புலி—உருத்திராட்சப் பூனை!!

முப்பிரிவில், வழக்கப்படி, இயல்பின்படி, சீமானும் குருவும் கூடிக்கொண்டு, உழைப்பவனை, உள்ளே வா, ஆனால் கொஞ்சம் அடக்கமாகப் பேசு! என்று கூறினர். அதாவது, மக்களின் பிரதிநிதிகளுக்கு, அதிகாரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும், பிரதிநிதிகளின் அளவும் குறைவாக இருக்கவேண்டும் என்றனர்.

மக்கள் மருண்டனரா? இல்லை! ‘ஆமாம் சாமி’ என்றனரா? இல்லை! ‘அப்படியா!’ என்று கேட்டனர்—ஆச்சரியத்துடன் அல்ல—கோபத்துடன். —பேச்சால் அல்ல—பார்வையால்!!

அந்தப் பார்வையை, சீமானும் குருவும் அதற்கு முன்பு கண்டதில்லை. பஞ்சடைந்த கண்களிலே இருந்து நெருப்புப் பொறி பறக்கும் என்று அவர்கள் எண்ணினதில்லை.

1789, மே மாதம் ஐந்தாம் தேதி கூடிய சபையில், முதலிலே இந்தக் கொந்தளிப்பு ஏற்பட்டது. மக்கள், மன்றத்தில் இடம் பிடித்துக் கொண்டனர்—சீமானும் குருவும் ஓரளவுக்கு விஷயத்தைப் புரிந்துகொண்டனர். புதியஉண்மைஉலவலாயிற்று. ஏழை, கோழையல்ல! சாகத் துணிந்தவனுக்கு, சீமான் சிறு துரும்பு!!

பணிந்தனர். மக்கள் வெற்றிக் களிப்புடன் முழக்கமிட்டனர்.

இது சபையல்ல—களம்! இவர்கள் மக்களல்ல—மாற்றார்—என்று மன்னன் எண்ணவேண்டி நேரிட்டது. தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட படை தேடினான், பிரான்சிலே அல்ல—வெளிநாடுகளில்! பட்டாளங்கள் பவனிவந்தன! பிரான்சு நாட்டு மன்னன் கேட்டான், அவன் பேச்சுக்கு மதிப்பு வைத்து வேறு நாட்டு மன்னர்கள் உதவிக்குப் படைகள் அனுப்பினர்! மக்கள் கேட்டால், படை எங்கிருந்து வரும்? யார் அனுப்புவர்? எனவே, மக்களே போர்வீரராயினர்—தெருவெல்லாம் பட்டாளம்! கிடைத்ததெல்லாம் ஆயுதம்!!

(10-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 20—7—47 [ஞாயிறு

## இருமுகம் போதாதே!

நான்முகன், அறுமுகன், முதலிய கற்பனைகளைக் கண்டிக்கும் நமக்கு இருமுகம் உள்ளனவாம்! கம்யூனிஸ்டு இதழ், ஜனசக்தியின் புதிய கண்டுபிடிப்பு இது. திராவிடர் கழகம், இருமுகத்தோனாகி விட்டதாம், சரணாகதி மனப்பான்மை கொண்டு விட்டதாம்—சர். சி. பி.யை ஆதரிக்கிறதாம்.

சர். சி. பி. யை முன்பெல்லாம் கண்டிக்கும் கழகம் இன்று எப்படி ஆதரிக்கலாம்? என்று கேள்வி கேட்கிறது, அந்த ஏடு; ஆதரித்தனர் என்பதற்கு ஆதாரம் காட்டாமலேயே! ஆதாரம் எங்கிருந்து காட்ட முடியும்—இருந்தால்தானே காட்டுவதற்கு?

திருவாங்கூர் தனிநாடு என்று பிரகடனம் செய்வதை, செய்வதுடன், வடநாட்டுப்பனியாவகாதிபத்யத்தின் ஏவலனாக இருக்க மறுப்பதை, திராவிடர் கழகம் பாராட்டியிருக்கிறது; சர். சி. பி. அங்கு திவானாக இருப்பதால் அல்ல—திவானாக இருந்தும் பாராட்டுகிறது என்பதே பொருந்தும். திருவாங்கூர் தனிநாடாவதை அங்கு, யார் திவானாக இருப்பினும் திராவிடர் கழகம் ஆதரிக்கும்—ஏனெனில், வடநாட்டுப் பனியா ஏகாதிபத்யத்துடன் பிணைக்கப்பட்டு தென்னாட்டின் எந்தப் பகுதியும் சிறைகுலைவதைக் கண்டு திராவிடர் கழகம் சகிக்க மறுக்கிறது.

திராவிடர் கழகத்தின் திட்டம் நாடறிந்தது — ஜனசக்தி நண்பர்களும் அறிவர்—திராவிடக் கூட்டாட்சி அமைக்கும் திட்டம் கொண்டது நம் கழகம். திருவாங்கூர், திராவிட நாட்டிலே ஒரு பகுதி. எனவே அந்நாடு, வடநாட்டுடன் இணைக்கப்படாமல் தனித்து இருக்கவேண்டும், இருந்தால்தான், நமது வியர்வை, இரத்தம், கண்ணீர் சிந்தி நாம் அமைத்தே தீரவேண்டிய 'திராவிட நாட்டின் கூட்டாட்சியிலே, திருவாங்கூரை இணையச் செய்யமுடியும். இதை எண்ணியே, நாம், திருவாங்கூர் தனிநாடு என்ற திட்டத்தை ஆதரித்தோம்—ஆதரிக்கிறோம்.

ஜனசக்திக்கு இது புரியவுமில்லை—புரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருப்பதாகவும் தெரியவில்லை. தீர்ப்பே கூறிவிட்டது, திராவிடர் கழகம் சரணாகதி மனப்பான்மை கொண்டுவிட்டது—அதன் தலைவர்கள் 'இருமுகத்தோனாக' உள்ளனர், என்று; 16—7—47 இதழில் தீட்டிவிட்டது — 'யாருக்கு வக்காலத்து' என்று ஓர் கட்டுரை.

ஆளுக்கேற்றபடி, வேளைக் கேற்றபடி பேசுவதும், இன்று ஒரு கோலம் நாளை அதற்கு நேர்மாறான கோலம் பூணுவதும், திராவிடர் கழகத்தின் பண்புமல்ல, பயிற்சியும் இந்தத் துறையில் கிடையாது. நமக்கு இருமுகம் இருப்பதாகவும், அதிலே ஒன்று ஜனநாயகம் பேசி, சர். சி. பி.யைத் தாக்கும் முகமாகவும், மற்றொன்று, முடி அரசுக்குப் பணிந்து சர். சி. பி.க்கு முகமன் கூறும் முகமாகவும் இருப்பதாக, ஜனசக்தி கருதுகிறது. நாம், ஜனசக்தியின் விழிபற்றிச் சந்தேகிக்காமல் இருக்க முடியவில்லை. இருப்பது அடியோடு தெரியாது குருடனுக்கு—இருப்பது பலவாக, வேறு வேறு ரூபத்தில் தெரிவது, யாருக்கு?—நாம் கூசுகிறோம் அதனைக் கூற. ஆனால் ஒரு முகம் கொண்டு, உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாத, இரு கொடி வந்தி அறியாத, நமது கழகம், இருமுகத்தோனாகத் தெரிகிறதாம் ஜனசக்திக்கு—விழியில் ஏற்பட்ட பழுது, பாபம், காரணமும் இருக்கிறது அந்த நிலைக்கு. நண்பன் என்ற முறையில் நாம், சிகிச்சை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்—அதிலும் குறிப்பாக 'திராவிடநாடு' அதிகக் கடமைப்பட்டிருக்கிறது, ஏனெனில் 'திராவிட நாடு' இதழ்தான், முன்பு சர். சி. பி. யைக் கண்டித்தும், மக்களாட்சிக்காக மார்தட்டியும் எழுதிவிட்டு, இப்போது, சர். சி. பி.க்கு வக்காலத்து வாங்கி இருக்கிறது என்று ஜனசக்தி கூறுகிறது.

6—7—47ல் திராவிடநாடு தீட்டிய, போர்முறை மாறவேண்டும் என்ற கட்டுரையே, ஜனசக்தியை இந்தவிதத்தில் குழப்பிவிட்டிருக்கிறது—கருத்து கலங்கியதால், கண் கலங்கவே, அந்தக் கலக்கத்தின் காரணமாக, நாம் இருமுகத்தோனாகக் காட்சி அளிக்கிறோம், நண்பரின் கண்களுக்கு.

29—12—46ல், 8—12—46ல், திராவிடநாடு, சர். சி. பி.யைப் பலமாகத் தாக்கி இருக்கிறது என்று ஜனசக்தி எழுதுகிறது. ஆம்! உண்மை! அப்படித் தாக்கி எழுதியதற்காக நாம் வெட்கப்படவுமில்லை, இன்றும் அதைக் கூறிக்கொள்ளக் கூச்சப்படவில்லை.

அவ்வளவு கண்டித்து எழுதிவிட்டு, இன்று சர். சி. பி.யை எப்படி ஐயா! ஆதரித்து எழுதலாம்? என்று கேட்கிறது ஜனசக்தி. நியாயமான கேள்வி, ஆனால், குழம்பிய மனதிலே முளைத்த அவசியமற்ற கேள்வி.

யாரய்யா அங்கே?

ஏ! யாரது நிற்பவன்?

என்னடா திமிர் உனக்கு!

நாலு நாழியாகக் கூவுகிறேன்.

பதிலே சொல்லாமல் நிற்கிறாயே!

கொஞ்சம் கோபத்துடன்தான், கேட்கிறான் — பதிலோ வரவில்லை. கூவினான் பிறகு—கொக்கரித்தான்—பாதை வழி அவ்வேளை வந்த வேறொருவன், சிரித்துக்கொண்டு, ஐயா! யாரோ ஆள் நிற்பதாக எண்ணிக்கொண்டு, ஏதேதோ கூவுகிறீரே அது ஆள் அல்ல—விளக்குக் கம்பம்—உன் விழிக்கு ஆள்போலத் தெரிகிறது—போதையின் விளைவு, போ, உன் வழி பார்த்துக்கொண்டு' என்று கூறிவிட்டுப் போகிறான்.

மது தரும் மயக்கத்தைவிட, மந்த மதியினருக்கு அரசியலில் ஏற்படும் சில பிரச்னைகள் உண்டாக்கும் குழப்பம், தெளிவற்ற நிலையைத் தந்து, மயக்கமூட்டிக் கூற வைக்கிறது—ஜனசக்தியின் நிலை அது. [illegible] அனுதாபம்.

சர். சி. பி.யை, நாம் அன்று கண்டித்துவிட்டு, இன்று ஆதரிக்கவில்லை. நாம், அன்று போலவே இன்றும் சர். சி. பி.யின் ஆட்சி முறையைப் பலமாகக் கண்டிக்கிறோம். திருவாங்கூர் தனிநாடு ஆவதை, வடநாட்டுக்கு வெள்ளாட்டியாகாமலிருப்பதை ஆதரிக்கிறோம்—அது சர். சி. பி.யை ஆதரிப்பதாக, எப்படி ஆகும்?

6—7—47 இதழில், திருவாங்கூர் தனிநாடுஆகவேண்டும், அதுவே முறை, சரியானவழி என்று எழுதினோம் — அதிலேயே, சர். சி. பி.யைப்பற்றிக் குறிப்பிடுகையில், நாம் எழுதியுள்ளதை, ஜனசக்திக்கு மீண்

டும் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

“அவருடைய கண்களில் நாம் என்றுமே ஜனநாயகஒளி வீசிடக் கண்டதில்லை. அந்தப் பெரியகண்கள் அரண்மனைகளைச் சோக்கச்செய்யும் அதியற்புத ஒளியைத் தான்பல காலமாகக் கக்கிக்கொண்டுள்ளன.” என்று எழுதினோம். இதற்குப் பொருள், சர். சி. பி. யை ஆதரிக்கிறோம் என்பதா?

“சர். சி. பி. யின் எதேச்சாதிகார மனப்பான்மை நாம் அறிந்ததே. அவருடைய ஆட்சியின் விளைவுகளையும் நாம் அறிவோம். எனவே அவருடைய போக்கை நாம் தூய்மையுள்ளது என்று ஒருக்காலும் கொள்ள முடியாது.”

இதுவும் அதே கட்டுரையில் நாம் தீட்டியுள்ள பகுதிதான். இதன் பொருள் கூடவா விளங்கவில்லை, சர்வதேசியப் பிரச்னைகளைப் புரிந்து கொள்ளும் ஜனசக்திக்கு! ஒருவேளை சர்வதேசியப் பிரச்னைகளிலேயே அதிக அக்கரை காட்டிக் காட்டி சர்வசாதாரணப் பிரச்னைகளைப் புரிந்துகொள்ள முடியாதநிலை ஏற்பட்டுவிட்டதோ! என்னமோ, பாபம்! ஏனோ தெரியவில்லை!!

‘திவானை விரட்டவேண்டும்.’ என்றும் தீட்டினோம், எழுமாதங்களுக்கு முன்பு மட்டுமல்ல‘ 6—7—47-ல், எந்தக் கட்டுரையைக் கண்டுவிட்டு, நாம் சர். சி. பிக்கு வக்காலத்து வாங்குகிறோம் என்று ஜனசக்திகூறுகிறதோ அதே கட்டுரையில்!

“திருவாங்கூர் தனிநாடுஆனதும், உடனடியாகத் திருவாங்கூருக்குத் திவான் திருவாங்கூரிலேயே கிடைப்பார் என்றுகூறி, கிளர்ச்சி ஆரம்பித்து, திவானைவிரட்டவேண்டும். இந்தத் திவான் விலகினால் திருவாங்கூர் மன்னரின் பார்வை மக்கள்மீது, அவர்களுக்குள்ள மகத்தான சக்தியின்மீது விழும். மன்னரால்மக்களின் எதிர்ப்பைமீறிஏதும் செய்யமுடியாது,”

என்று அதேகட்டுரையில் எழுதினோம்.

இதுதான், சர். சி. பி. யைத்தாங்கிப்பிடிப்பதா? ஜனசக்தியே! ஏனோ குழப்பிக்கொண்டாய்,’ உன் மனத்தையே!!

“இதுவரையில்மக்களாட்சிக்காக நடத்தப்பட்ட கிளர்ச்சிகள், பட்ட வேதனைகள், செய்த தியாகங்கள் யாவும் பலன் அளிக்காமற் போனதற்குக்காரணம் என்ன? மன்னர், உயரஉயர ஏறிவிட்டதற்குக் காரணம் என்ன? திவான் சர். சி. பி. யின் போதனை, மன்னருக்குமுழுக்க முழுக்க நிரம்பிவிட்டது.”

என்று விளக்கினோம், திவான் சர். சி. பியைத் துரத்தவேண்டும் என்பதற்குக் காரணம் காட்டி.

இவ்வளவு கண்டித்திருக்க, ஜனசக்தி, ஆரிய சர். சி. பி. திராவிடராகிவிட்டாரா,? ஏன், சர். சி.பியை ஆதரிக்கிறீர் என்று நம்மைக்கேட்கிறதே, நமக்கு, அந்த விளக்குக் கம்பத்தை ஆள் என்று எண்ணிக் கொண்டு கூவினவன் நினைவிற்கு வராமல் இருக்க முடியுமா?!

சர். சி. பி. யை மட்டுமல்ல, மன்னராட்சியை நாம் ஆதரிப்பதாகக் குறை கூறுகிறது அந்த ஏடு. அன்று மன்னராட்சியைக் கண்டித்தீரே, இன்று அதை விரும்புவது ஏன் என்று கேட்கிறது. நமது கட்டுரையிலோ

“திருவாங்கூர் மக்களுக்குப் பொறுப்பாட்சி வேண்டும், அரண்மனை அதிகாரம்அளவு படுத்தப்பட வேண்டும்,மக்களாட்சிஏற்பட வேண்டும்,முடிதரிக்கும்மன்னர், இனி ஒரு சின்னமாக இருக்வேண்டுமே ஒழிய, அவருடைய புன்சிரிப்பிலே பிறருக்கு வாழ்வளிக்கும் சக்தியும், கோபத்திலே பிறருடைய வாழ்வைக் கருக்கும் வல்லமையும் இருக்கும் நிலை மாற வேண்டும், என்று பட்டம் தாணுப் பிள்ளை கூறுகிறார். இந்த ‘வாதம்’-யாரும் மறுக்க முடியாதது; அதிலும் இந்த ‘ராஜாதிராஜர்களின்’ யோக்யதைகளை அறிந்தவர் எவரும் முடியாட்சி முறைமாற வேண்டுமென்று கூறத்தயங்க மாட்டார்கள்.” என்று தீட்டியிருக்கிறோம்.

“பல ‘ராஜாக்கள்’ பிளாசி யுத்தத்துக்குப் பிறகு, வெள்ளைக்காரனிடம் பல்லைக்காட்டி, தங்கள் பீடத்தைக் காப்பாற்றிக் கொண்டவர்கள். அவர்களின் சபையிலே, கட்டியக்காரன், “ராஜாதி ராஜ, ராஜமார்த்தாண்ட ராஜகோலாகல, வீரதீர கெம்பீர” என்று பராக்குக் கூறும்போது கூட. அவனுக்கே தெரியும் இவ்வளவும் வாங்குகிற சம்பளத்துக்குக் கூறுவதே தவிர, உண்மை அல்ல என்று. அப்படிப் பட்ட ‘ராஜாக்கள்’—மக்களாட்சி கேட்பவர்களின் போக்கைக் குறை கூறவோ, கண்டிக்கவோ, முடியாது, கூடாது. ஜனநாயகக் கோட்பாட்டின்படி, முடியரசு முறை மாறித்தான் ஆகவேண்டும்.” என்றும் தீட்டியிருக்கிறோம். பொதுவாகச் சொன்னால், சிலருக்குப் புரியாமல் போகுமே என்ற கவலையுடன்.

“பட்டம் தாணுப்பிள்ளை, திருவாங்கூர் தனி சுதந்திரநாடு என்றுபிரகடனம் செய்யப்படுவதை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை, அதன் காரணமாக, மக்களின் உரிமைப் போர் நடத்தத் தயங்கவேண்டியதுமில்லை.”

என்றும் தீட்டினோம். இவ்வளவு விளக்கமாக, மக்களாட்சி வேண்டுமென்று நாம் எழுதியிருக்கிறோம்—இருந்தும் “இருமுகத் தோற்றத்” தோன்றுகிறது நண்பருக்கு. என்னென்பது! இத்தகையோரைக்கண்டு சிரித்திட, இருமுகமும் போதாதே! அவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது அவர் தம்போக்கு. அந்தவேடிக்கையுடன், கருத்திலே ஏற்பட்ட குழப்பமே, அவரின் குளறலுக்குக் காரணம் என்று தெரியும்போது சற்றுவேதனையும் பிறக்கிறது—அவரின்நோய் போக்க வேண்டுமென்ற அக்கரையும் தோன்றுகிறது—அதனாலேயே, இந்த ‘சிகிச்சை.’ ஒரே ‘டோஸ்’! போதும் என்று நம்புகிறோம், வியாதி ஆரம்பத்தசையில் இருப்பதால்.

*

## பாகவதர்

இரண்டாண்டுகளுக்கு மேலாக நாம் கேட்க முடியாமலிருந்த இன்னிசை விருந்தை, நமக்களிக்க இருக்கிறார் தோழர் M. K. தியாகராஜ பாகவதர், 22—7—47 அன்று மாலை திருச்சி ரேடியோவில் பாடுகிறார்.

## வாழ்க்கை ஒப்பந்தம்

7—7—47ல் தஞ்சைத் தோழர் சொர்புலிங்கத்துக்கும் தோழியர் தேவியம்மாளுக்கும் பதிவுத் திருமணம், தோழர் V. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில், பல தோழர்களின் சொற்பொழிவுகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

7-ம் பக்கத் தொடர்ச்சி

அதற்குப் பிறகு, புரட்சியின் போக்கைத் தடுக்க யாராலும் முடியவில்லை. எங்கெங்கு முன்பு பணிந்து கிடந்தனரோ, அங்கெல்லாம் பாய்ந்து சென்று தாக்கினர்! எங்கெங்கு ஏவல் புரிந்தனரோ, காவல் புரிந்து வந்தனரோ, அங்கெல்லாம், சென்று தாக்கினர்! உல்லாசபுரி அல்லோலகல்லோலப்பட்டது. மங்கையர் வெறியிலே மதுக்கிண்ணங்களைக் கீழே வீசும் சத்தமன்றி வேறறியாச் சீமான், தன் மாளிகைச் சுவரை கட்டை கல், கையில் கிடைத்த சாமான், சம்மட்டி கொண்டு, 'கும்பல்' தாக்குவது கேட்டு, திகைத்தான்! அவனுடைய 'வீரம்' உதவிக்கு வரவில்லை. வீரமல்லவே அது!

பசி! பசி! பசி!!—ஆம்! முன்பு கதறினன்.


ஜூலை 14-ல்? வெட்டு! குத்து! கொல்லு!—ஆசைதீரச் சொன்னான்! சொல்லிச் சொல்லி ஆனந்தப்பட்டான், அன்றுவரை சொல்லொணுக் கஷ்டப்பட்டவன்!! பாஸ்ட்டிலியை இடித்துத்தரைமட்ட மாக்கினர்! தெருவெல்லாம், திரண்டு திரண்டு சென்றனர்—புரட்சி பொங்கிவழிந்தது. ஒரேநாளில், பலகாலமாக இருந்துவந்த ஆணவம் தரைமட்டமாயிற்று. 150 ஆண்டுகளுக்கு மேலாக, கொடுமைக் கூடமாக இருந்துவந்த பாஸ்ட்டிலி சிறைக்கூடமே, தூள் தூளாயிற்று!

சிறைப்பட்ட மன்னன், சிதறிய சீமான்கள், கோபம் வெறிபோலாகிவிட்ட நிலையில் மக்கள்!



கைதிகள் விடுதலை

பிறகு, குழப்பம் சதி, கலகம், இவைகள் ஏற்பட்டு! மீண்டும் மக்கள் தொல்லைக்கு ஆளாயினர் என்பதும் உண்மை! இரத்தவெறிபிடித்துஅலைந்தனர் என்பதும் உண்மை! மீண்டும் சர்வாதிகாரத்துக்குப் பலியாயினர் என்பதும் உண்மை—ஆனால்கொடுமை ப[illegible]டுத்தப்பட்ட மக்கள், தங்கள் கஷ்ட[illegible] [illegible] உரிமை [illegible] புரிந்த [illegible], ஜூலை 14, என்பது மறுக்க முடியாத உண்மை—அவர்களை அந்த அளவுக்கு 'இரத்தவெறி' கொள்ளவைத்தது, மன்னனின் எதேச்சாதிகாரம், சீமானின் செருக்கு, குருமார்களின் கபடம்! எக்காலமும் [illegible]க்களை அடக்கியே வைத்துவிட முடியும் என்பது வீணெண்ணம் என்பதை உலகுக்கு உரைத்த நாள் ஜூலை 14! ஏழை என்ன செய்வான்? என்று ஆணவம் பேசலாம், முதலில், பலநாள், ஆனால் அவன் அழுவதைநிறுத்திக்கொண்டு அச்சத்தைத் துரத்திவிட்டு, அடிமைத்தளைகளை உடைத்தெறிந்து விட்டு, கோபக்கனல் கக்கும் கண்களால் ஆதிக்கம் செலுத்துபவனைப் பார்க்கும் நாள் ஒன்று வரும்—அது தான்புரட்சி! அதைத்தடுக்க, பட்டாளத்தால் முடியாது என்பதைப் பாருக்கு எடுத்துரைத்த நாள், ஜூலை 14.



பாஸ்ட்டிலி அழிக்கப்படுகிறது.

—ஆணவத்தையன்றோ அவனே அதுவரை வீரம் என்று எண்ணிக் கொண்டிருந்தான். அவன் மனக்கோட்டை தூளாயிற்று—மாளிகைக்கும் அதே கதி. புரட்சி, மாளிகைகளை மண்மேடாக்கிற்று. மன்னன், குடும்பத்துடன் பிடிபட்டான். எங்கும் இரத்தமயம்! "வெறிநாய்களைச் சுட்டுத்தள்" — என்று கூறிய ஆணவச்சீமானின் வாயிலிருந்து இரத்தம்!! புரட்சி, பயங்கர உருவெடுத்தது—தடுக்கமுடியாததாகி! எதிர்ப்பட்டதெல்லாம் தூள்! எவனெதிர்த்தாலும்சரி, வெட்டு! குத்து! கொல்லு!!

ஜூலை 14-ந்தேதி என்றால் இது தான்—ஆணவம் அழிந்தபடலம்—ஆதிக்கக்காரன் அடிபணிந்த படலம்,

கோலைவாளினை எடடா!
மிகுகோடியோர்செயல் அறவே

என்று மக்கள் முழக்கமிட்ட நாள். புரட்சிக்கவிஞன், தந்த லாமார்சலே! என்ற கீதம்பாடி மக்கள் தம் தாட்சியை நிறுவப்போரிட்ட நாள்! மக்கள் வகுத்த அரசியல் திட்டம், அவர்கள் புகுத்திய ஏற்பாடு, வெற்றியோ, நிம்மதியோ, தரவில்லை என்பது உண்மை. புரட்சிக்குப்

ஜூலை 13 வரையிலும் கூட, சீமான்கள், பிரான்சிலே மட்டுமல்ல, எந்த நாட்டிலும், ஏழை, கோழை, என்று தான் எண்ணினர். ஜூலை 14ல் தான், ஏழை, கோழையல்ல, எரிமலை!! என்பதை அறிந்தனர்.

✲

## பேசாதே! வாயை மூடு!

—0—

மாடு மேய்க்கும் சிறுவனைப் பார்த்து, மரியாதைக் குறைவாகப் பேசும் மிரட்டல் வார்த்தை அல்ல. எடுபிடி ஆளுக்கு எஜமான் போட்ட உத்தரவும் அல்ல. வட்டிக் கடை வள்ளல், கடன் பட்டவனைப் பார்த்ததும் பீரிட்டு வந்த பேச்சும் அல்ல. அமைதி, ஒழுங்கு எனும் பெயரால் அதிகாரத்திலுள்ளோர், தேவையைத் தெரிவிப்போரின் நாவிற்குத் தளை பூட்டும் கட்டளையும் அல்ல. கழுத்தைக் கொடுத்த கன்னியிடம் கல் போன்ற கணவன் கொஞ்சும் சரச மொழியும் அல்ல. மதுவருந்தி மயக்கந் தெளியாதோர் உரைத்திடும் உளறலும் அல்ல. பின் யாரைப் பார்த்து எவர் பிறப்பித்த ஆக்ஞை இது?

பிரான்சின் வீதிகளிலே நாசம் நர்த்தனம் ஆடிக் கொண்டிருந்தது. ஆகாய குண்டு வீச்சால் கட்டிடங்கள் பல, தரைமட்டமாயின. படைப் பயிற்சியற்ற குடிகளின் குருதி மண்ணில் கலந்தது. நிரபராதிகளின் கூக்குரல் விண்ணில் எழுந்தது. எதிரியின் படை எக்காளமிட்டுக் கொண்டு, அழிவை அள்ளித் தெளித்து, பாரீஸ் நகரை நோக்கிக் காற்றினும் விரைந்துவந்தது. எதிர்த்துத் தடுப்பார் இல்லை. ஏனென்று கேட்பார் இல்லை. குதிக்கால் பிடரியில்படப்புறமுதுகுகாட்டிஓடுவோர் படையாக பிரான்சின் நிலை இருந்தது. போர் பல கண்ட வயோதிகர் வணங்கினார். ஹிட்லர் தாளடி பணிந்தார். முன்னாள் தாம்பெற்ற புகழைப் புல்லனின் காலடியில் காணிக்கையாக வைத்தார். மேலும் ஏற்பட இருந்த அழிவிலிருந்து பிரான்ஸ் நாட்டைக் காப்பாற்ற, படைத்திறம் படைத்த பெரிய கிழவன் பெடெய்ன் எடுத்துக் கொண்டார், இச் சிறுமை தரும் நடவடிக்கையை. நினைத்தது நடக்கவில்லை. கிடைத்தது ஏமாற்றம். பழியும், தூற்றலும் பரிசாகக் கிடைத்தது பெடெய்னுக்கு. சாம்ராஜ்யம் சரிந்தது. ஹிட்லரின் ஏவலுக்குக் காத்திருக்கும் கதிகெட்ட நாடாகப் போய்விட்டது பிரான்ஸ்.

அடிமை வாழ்வறியாத அந்த நாட்டு மக்கள், வந்த அலங்கோலத்திலிருந்து மீள வகையறியாது தவித்தனர். தங்கள் செல்வம், நாஜியர்களால் சூறையாடப்படுவதைக் கண்டு பதறினர். செயலாற்றும் வழியற்றுச் சோர்ந்தனர். முன்னாள் வாழ்வை நினைத்து நினைத்து நொந்தனர்; கண்ணீர் பெருக்கினர். இந்நிலையில் தளபதி தேகோல், உற்சாகத்தோடு ஹிட்லரைத் தட்டிக் கேட்கக் கிளம்பினார். 'விடுதலை பிரான்ஸ்' எனும் இடைக்கால சர்க்காரையும் இங்கிலாந்தில் தோற்றுவித்தார். பிரான்ஸ் மக்கள் ஒன்று திரண்டனர். நாஜியின் பிடியிலிருந்து மீளுவோம் எனும் நம்பிக்கை பிறந்தது நாட்டு மக்களிடம். தக்காரோடு சேர்ந்து, தகுதியான செயலாற்றி, சீரழிந்த பிரான்சை விடுதலை செய்தார். மக்கள் வாழ்த்தினர்; வரவேற்புக் கூறினர்; விருந்தளித்தனர்; பதவியில் அமர்த்தினர்; பரிசுகள் பல வழங்கினர்; பட்டங்கள் பல சூட்டினர்; ஹிருதயத்தில் இருப்பிடம் தந்தனர்; கனவிலும் கண்ணியப்படுத்தினர்; மரியாதை காட்டினர்; மகிழ்ந்தனர்; மகிழ்வித்தனர்.

நாட்டுக்கு விடுதலையை வாங்கித் தந்த வீரனுக்கு வேண்டிய மட்டும் உபசாரம் செய்தனர். சிதைந்த பிரான்சைசெப்பனிடும்திறம்தெகோலிடம் இல்லை என்பதைப் பின்னர் கண்டனர். அவர் தீட்டிய திட்டம், நாட்டிற்கு நல்லது செய்யாது என்பதை உணர்ந்தனர். அவர் போர்க்களப் புலியே யன்றி, புத்துலகச்சிற்பியல்ல என்று தெரிந்தனர். வேலைக்கேற்றஆள் தேவையேயன்றி, ஆளுக்கு ஏற்ற வேலை தந்து அழிவை அணைத்துக்கொள்ள முடியாதெனும் முடிவிற்கு வந்தனர். தெகோலுக்குத் தகுதியான பணி தாணியாளுவதல்ல எனத் தீர்மானித்தனர். ஆட்சி பீடத்திலிருந்து அவரை விலக்கினர், அரசின் தன்மையைத் தெரிந்திருந்த மக்கள்.

ஜூலை 27-ல் ரென்னஸ் எனும் நகரில் தெகோல் பேசுவதாக இருந்தது. நகர சபை கூடிற்று. அவரைப் பேச அனுமதிப்பதா கூடாதா என விவாதித்தது. ரென்னஸ் நகரின் விடுதலைக்கு சேர்த்துத்தான் தெகோல் பாடு பட்டார். இருந்தாலும் அங்கு பேச உரிமை மறுக்கப்பட்டு விட்டது விடுதலைக்குப் போரிட்ட பெரிய வருக்கு. அந்நகரம் உள்ள வட்டாரந்தான், தற்சமயம் அதிகாரத்திலுள்ள அரசைக் கவிழ்க்க ஆதரவு காட்டப்படும் இடம் எனச் சொல்லப் படுவது. நகர சபையின் தீர்ப்பு பாதகமாகப் போய்விட்டது. 'பேசாதே! வாயை மூடு!' எனத் தீர்மானித்து விட்டது. இது கண்டு நகர சபைத் தலைவர் விலகுவதெனும் முடிவிற்கு வந்துள்ளார்.

—0—

## நீதிதேவன் மயக்கம்

'நீதிதேவன் மயக்கம்' எனும் புதிய நாடகம் 14—7—47 அன்று திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில், சென்னைத் தோழர் S. குருசாமி, B. A. அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. பெரியாரின் அண்ணர் E. V. கிருஷ்ணசாமி, திராவிடர் கழக நிர்வாகத் தலைவர் திருச்சி தோழர் T. P. வேதாச்சலம், துணைத்தலைவர் குடந்தை தோழர் K. K. நீலமேகம், V. சின்னதம்பி, தஞ்சை யாகப்பநாடார் K. R. ராமசாமி, சிதம்பரம் ஜெயராமன், T.P. பொன்னுசாமி, ஆகியவர்களும், பலபிரமுகர்களும், அதிகாரிகளும் வந்திருந்தனர். தோழர் E. V. K. சம்பத், தோழர் குருசாமி அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்கையில், கரூர் வழக்குசம்பந்தமாக நிதிதிரட்ட நியமிக்கப்பட்ட கமிட்டிபற்றிக் குறிப்பிட்டார். நாடகம், 10-மணியிலிருந்து 1மணி வரை நடைபெற்றது. தோழர்கள் அண்ணாத்துரை அன்பழகன், காஞ்சி கல்யாணசுந்தரன், மணி, சம்பந்தம், சீனு, வெங்கட்ராமன், கிருஷ்ணமூர்த்தி, ஈழத்தடிகள், ராஜமாணிக்கம், மாணிக்கம், பஞ்சாட்சரம், நரசிம்மன், எதிராஜ், கோவிந்தன், மார்கு, சண்முகம், ஆகிய பலர், திறமையாக நடித்தனர். சென்னைத் தோழர் குப்புசாமி அவர்கள் மேக்அப் செய்து உதவினார். தஞ்சை K. R. ராமசாமியின் கிருஷ்ண நாடக சபை நடிகர்களும் வாத்தியக் கோஷ்டியினரும் பின்னணிச் சங்கீதம் நடத்தினர். நாடகத்தன்று நன்கொடை மூலமும், டிக்கட் விற்பனை மூலமும் 5161 ரூபாய் வசூலாயிற்று. வரி ஆயிரம் ரூபாயும் மற்றும் செலவுகளும் போக, மூவாயிரம் ரூபாய்க்கு மேல், நிதிக்குக் கிடைக்குமென்று தெரிவிக்கப்பட்டது. நாடகம் முடிந்த பிறகு தோழர் S. குருசாமி, நாடகக் கலையிலே ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியைப் பாராட்டிப் பேசினார். தோழர் நெடுஞ்செழியன், அதைத் தொடர்ந்து பேசினார். பின்னர், தோழர் அண்ணாதுரை, 5161 ரூபாய் கொண்ட பணமுடிப்பைத் தோழர் சண்முக வேலாயுதம் அவர்களிடம் அளித்து, கரூர் தோழர்களுக்கு வந்துற்ற இடரைப் போக்க வேண்டியது இயக்கத்தின் நீங்காக் கடமையாகும் என்பதை வலியுறுத்திப் பேசினார். தோழர் சண்முகவேலாயுதம் நன்றி கூறினார். திருச்சி தோழர் சங்கரன், சாமபு ஆகியோரும், அவர்களுடனிருந்தவர்களும் அரும்பாடுபட்டுத் திறமையுடன் நாடகத்தை வெற்றிகரமாக நடத்திவைத்தனர்.

—0—

# சொன்னார்! சொல்லட்டும்!!

—(ஃ)—

(1) இந்தியா. பாரதவருஷம், ஒரு நாடு.

(2) இந்து முஸ்லிம், என்று பேதம் கிடையாது.

(3) இரு அரசுகள், இருராஜ்யங்கள் ஏற்படுத்தக்கூடாது.

(4) முஸ்லிம்கள், லீகை ஆதரிக்கவில்லை.

(5) நாட்டுக்குப் பட்டாளமே கூடாது.

(6) அஹிம்சையையே சகல சமயத்திலும் அனுஷ்டிக்க வேண்டும்.

(7) ஆலைகள் கூடாது—ராட்டைதான்வேண்டும்

இவைகள்,காந்தியார் சொன்னவை; பலகாலமாக; திடமான நம்பிக்கையுடன்.

ஆனால், என்ன நேரிட்டு இருக்கிறது. பாகிஸ்தான் ஏற்பட்டு விட்டது—பிர்லாவின் ஆலைஸ்தான் அமைந்துவிட்டது — பட்டாளங்கள் பவனி வருகின்றன!!

தாம் சொன்னபடி நடந்தாலும் நடைபெறாவிட்டாலும், சொல்வதைமட்டும் சொல்லிக்கொண்டே இருப்பது என்றசுபாவம்கொண்டு விட்டார் காந்தியார். எனவேதான், தாம் பலகாலமாகக் கூறிவந்தது, கவைக்கு உதவாமல் போனதைக்கண்டும், தமது பேச்சின்படி, பக்தர்களே நடக்கவில்லை என்பது தெரிந்தும், எதையோ ஒன்று சொல்லிக் கொண்டே இருக்கிறார். அந்த முறையிலே இப்போது காந்தியார்,

**திராவிடஸ்தான் கூடாது**

என்று பேசுகிறார்.

**பாகிஸ்தான் கூடாது**

என்றுதான் சொன்னார்.

ஆனால் பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்டது! "திராவிடநாடு" பிரச்னையும் அப்படிப்பட்டதே!!

காந்தியார் எதிர்ப்பார் கடைசிவரையில்

ஆனால் 'திராவிடநாடு' திராவிடருக்கு என்ற திட்டம் நிச்சயம் வெற்றிபெற்றே தீரும்.

✲

## படையெடுப்பு!

ஆள் சேர்க்கப் படவில்லை. திறம் படைத்தவர்கள் திரட்டப் படவில்லை. அணுகுண்டு தயாரிக்கவில்லை. ஆகாய விமானம் அமைக்கவில்லை. கப்பல் கட்டப்படவில்லை. போர் முரசு கொட்டப்படவில்லை. கத்தியில்லை; இரத்தம் இல்லை. இருந்தாலும் படை யெடுத்தாகிவிட்டது; வெற்றியும் கண்டாகிவிட்டது!

டச்சு ஆதிக்கத்தின் அழுத்தம் சரிவர நீங்கவில்லை. இந்தோ நேஷ்யாவிற்கு விடுதலை இன்னும் சித்தியாகவில்லை. இருந்தாலும் புதிய படையெடுப்பு ஏற்பட்டு விட்டது. 'ஆசியா ஆசியர்களுக்கே' எனும் தத்துவம் தலை காட்டுகிறது. இந்தியாவின் முதல்,இந்தோநேஷ்யாவில் தொழிற்சாலையாகக் காட்சி அளிக்கப் போகிறது. 20 கோடி ரூபாய் முதலில் நெசவுத் தொழிற்சாலையும் பிறவும் ஏற்படுத்த 17—6—47 ல் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளவர் B. பட்நாய்க் எனும் வட நாட்டு தொழிற்சாலை சீமான். ஒரிசாவில் நெசவுச்சாலையும், சணல் தொழிற்சாலையும் அவருக்கிருக்கிறது. மொத்த மூலதனத்தில் நூற்றுக்கு 51 பங்கு இந்தோநேஷ்ய சர்க்காருக்குச் சொந்தம். மிச்சம் பட்நாய்க் பரம்பரையினருக்கு.

இந்தியாவில் துணி கிடைக்கவில்லை. இங்கு மக்கள் மானங்காக்க வகையில்லாமல் மனம் புழுங்குகிறார்கள். வேலையற்றோர் எண்ணிக்கை தினம் தினம் கூடிக்கொண்டு வருகிறது. கடல் கடந்து சென்று, வயிற்றைக்காட்டி வாட்டமடைகிறார்கள்; மானமழிகிறார்கள். இங்கு இந்த கேவல நிலை இருந்தாலும், இந்தோநேஷ்யாவில் தொழில் வளம் ஏற்படுத்த பட்நாய்க்குகள் பறந்து செல்கிறார்கள்.

கப்பலேறிச் சென்று பிறநாட்டில் தொழில் வளம் காணும் அளவிற்கு, இங்கு வட நாட்டாரின் முதலாளித்தனம் பலம் பெற்றிருக்கிறது. இங்கு உள்நாட்டில் தொழிற்சாலைகளை அமைப்பதால் அதிக லாபம் எதிர்பார்க்க முடியாது. இங்கு செலவும் அதிமாகும். தொழிலாளர்களும் கொஞ்சம் விழிப்படைந் திருக்கிறார்கள். அதட்டிக் கேட்கும்நிலைக்கு கட்டுப்பாட்டை வளர்த்திருக்கிறார்கள்.

இதுமவுல்லாமல் இங்குபடே படே பிர்லாக்களின் போட்டியையும் சமாளித்து ஆகவேண்டும். அதிக லாபம் கொடுத்து வாங்கும் அளவிற்குச் சக்தியும் மக்களிடம் இல்லை. மேலும் மேலும் உற்பத்தியைப் பெருக்கி லாப வேட்டையாட வாய்ப்புத் துளியும் இல்லை. ஆதலால், முதல் கடல் கடந்து செல்கிறது. மக்கள் பிரயாணம் செய்வதற்கு ஆகாய விமானம் விடும் தொழிலும் தொடர்ந்து ஏற்பாடாகப் போகிறது.

இந்தோநேஷ்யாவில் இயற்கை வளம் நிரம்பி இருக்கிறது. தொழில் வளம் மிக மிக சுருக்கம். வாழ்க்கைத்தரமும் நிரம்ப மட்டம். மக்களின் தேவைகளும் சொற்பம். தங்கள் பலத்தையும் நிலையையும்அங்குள்ள மக்கள் உணரப் பல ஆண்டு செல்லும். அதுவரையில் பட்நாய்க்குகளுக்குச் சரியான வேட்டைதான். அதிகாரம் இல்லாமல் அகப்பட்டதைச் சுருட்டும் பணி தங்கு தடையின்றி நடைபெறும். எனவேதான் பட்நாய்க் பயணம் வைக்கிறார் இந்தோநேஷ்யாவிற்கு.

# பழந்தமிழருக்குக் கோவில்கள் உண்டா?

பழந்தமிழர் இயற்கையையே தெய்வமாக வணங்கி வந்தனர்.

பின்னர் நம் முன்னோர் ஏத்திப் போற்றிய தமிழ்க் கடவுள் முருகனே எனக் கூறுவாருமுளர். ஏனெனில் முருகன் என்ற தூய தமிழ்ச் சொல் அழகு எனப் பொருள் படுதலான். முருகனைப் பற்றிய பொய்ப் புராணங்களும், முன் வழக்கிலில்லாத வழிபாட்டு முறைகளும் ஆரியர் வந்த பிறகே புனைந்துரைக்கத் தமிழர் அதை ஆராய்ந்து பாராமல் ஏற்றனர் ஏமாந்து. மிகப் பழங்காலத்தில் தமிழ் நாட்டில் ஆலயங்கள் இல்லை. அசோக அரசர் தூபிகள் அமைத்துப் புத்த கோயில்களும், கல்வெட்டு உருவங்களும் நிறுவியதைக் கண்டு நம்மவரும் ஆரியர் தூண்டுதலால், அவரைப் பின்பற்றிக் கோவில்கள் கட்டினர் என்பது நாட்டு வரலாறு அறிந்த அறிஞர் கூறும் முடிபு. தமிழரசர் அவையில் ஆதிக்கம் பெற்றிருந்த ஆரியர் மொழி கேட்டு, அரசர் பல கோவில்கள் உண்டாக்கினர். 'அரசர் எவ்வழி குடிகள் அவ்வழி' என்ற முதுமொழிக்கிணங்க பொது மக்களும் ஆங்காங்கு ஆலயங்கள் கண்டனர். அதனால் மன்னரும் பிறரும் ஆரியர் தம் சூழ்ச்சி வலையில் சிக்கி மீள வழியறியாது, மனம் மாழ்கின்றனர். அதன் பயனாய் தமிழர் அறிவு மங்கியது. மூட நம்பிக்கை என்னும் படு குழியில் வீழ்ந்தனர். பணம் பகற் கொள்ளை அடிக்கப்படுகிறது. செல்வர் வெளியிடங்களுக்குச் செல்லுவதன் நோக்கம், அவ்வூர்களின் இயற்கை யழகினையும், நிலங்களின் தன்மையையும், மக்களுடன் அளவளவிப் பழகுதலையும், கோவில்களிலுள்ள சித்திரக்கை வேலைப்பாடுகளையும், கண்டு களித்து அறிவைப் பெருக்கிக்கொள்ளுவதற்காகவே இருத்தல் வேண்டும்.

ஆனால் இக் காரணங்களை விளக்காது, தமிழரை ஏய்க்க வைகை, காவிரி முதலிய ஆறுகளில் நீராடல், மதுரை, காஞ்சி முதலிய ஊர்களில் உள்ள கடவுளை வணங்குதல், வீடு பெறற்கு வழி என ஆரியர் எழுதி வைத்தனர். தமிழர் நம்பினர். ஏழைகளும் மூட நம்பிக்கையால் தம் பெண்டு பிள்ளைகளோடு பிரயாணம் செய்து வெறுங்கையோடு வீடு திரும்புகின்றனர். யாது பலன் பெற்றனரோ? அறிகிலோம்,

கோவில் நுழைவு, கடவுளுக்குக் கற்பூரம் காட்டல், அருச்சனை புரிதல் முதலிய முக்கிய மற்ற செயல்கட்கெல்லாம் பார்ப்பனர், காசை, அட்டையென உறிஞ்சுகின்றனர். கடவுளுக்கும் பூணூல் அணிவித்துப் புராணக் கதைகளிலும் கடவுள் பார்ப்பன வடிவுகொண்டு அடியார்க்கு உதவி செய்ததாக வரைந்து வைத்து மக்கள் தம்மை உயர்ந்த குலத்தினர் என எண்ணும் வகையில் ஆக்கம் தேடிக் கொண்டனர். நம் நாட்டில் தமிழர், விழா, அபிடேகம், திருப்பணிகள் முதலியவற்றின் பேரால் செலவழிக்கும் பொருளுக்குக் கணக்கே இல்லை. திருமயிலை, பெரிய குளத்தின் கருங்கற் படிகள் புதிதாக அமைத்த காலத்து இவ்வூர் செல்வம் மிகப் படைத்த ஆரியர் உறைவிடமாயிருந்தும், ஒருவராவது இத்திருப்பணிக்குதவ முன் வந்தாரில்லை. இதற்குக் குளக்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் கல்மேல் எழுத்தே எடுத்துக் காட்டாக இலங்குகின்றது. பொது மக்களுக்குப் பயன் படும் இச்செயலுக்கும் உதவாத ஆரியர் தமிழரை ஏமாற்றிப் புண்ணியமுண்டு, புருடார்த்தமுண்டு எனக் கூறி அறச்சாலைகள் ஆக்கச் செய்கின்றனர். அப்பாவிகள் அவர்களே தங்கவும் உண்ணவும் எழுதிவைத்து விடுகின்றனர். தமிழர்க்கு அங்கு இடமில்லை. தமிழர் அறம் பல புரிய ஆரியர் நலம் துய்க்கின்றனர். எல்லாவிடங்களிலும் அவர்கட்கே உரிமையும், முதன் மரியாதையும் எற்றுக்கு? நம் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழர்க்கு ஆவன செய்யத் துணிந்து முற்படவேண்டும்.

கடவுள் வேண்டுதல், வேண்டாமை இல்லாதவர். மூவாசை துறந்தவர், அவர் அருளுக்குரியவர், என நூல்கள் அறைகின்றன. ஆனால் அவற்றைக் கடந்து நிற்கும் கடவுளுக்கோ சிற்றூர்கள் பலவுண்டு. ஆண்டுதோறும் திருமணங்கள் நல்லோரையில் நடைபெறுகின்றன. விலையுயர்ந்த அணிகள் சாத்தப்படுகின்றன. என்ன! அறிவீனம். தமிழகத்துக்குள்ள சித்திரச்சிற்பவேலைப் பாடமைந்த கோவில்களைப் போன்று உலகில் வேறெங்கும் கிடையாது. இத்திறன் திராவிடர் சீர்திருத்தத்தையும், நுண்ணறிவையும் தெள்ளென விளக்கும். நம் நாட்டில் உள்ள கோவில்கள் கணக்கிலடங்கா. அவற்றைப் பராமரிக்க முடியாது பாழாயின. பல செல்வர் மேலும் பெரும் பொருட் செலவில் கோவில்கள் ஆக்குகின்றனர். உள்ள கோவில்கள் போதாவா வரைச் சுரண்ட? மக்கள் மனமே ஆண்டவன் கோயில், அன்பே கடவுள், கடவுள் உருவமற்றவர் எனத் தமிழ் நூல்கள் முறையிடுகின்றன. நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சூட்டியே, சுற்றி வந்து மொண மொணென்று சொல்லு மந்திரமேதடா? "நட்ட கல்லும் பேசுமோ? நாதனுள்ளிருக்கையில்" எனக் கூறிச் சென்றனர், தமிழ்ச் சித்தர். மக்களுக்கு நல்லறிவூட்டும் பல சித்தர்கள் பாடிய செய்யுட்களைத் தமிழர் படிக்க வேண்டும். அறிவைத் துலக்கி ஆண்மையுடன் நடக்கவேண்டும்.

கடவுள் நம்மிடமிருந்து எதையும் வேண்டுகிறாரில்லை. நாமே நம் மூடப் பழக்கத்தால் பணத்தைப் பாழாக்குகிறோம். அறிவை அடகு வைக்கிறோம். தமிழர் கடவுள் இல்லை எனக் கூற வரவில்லை. ஆனால் கடவுளின் பேரால் ஒரு கூட்டத்தார் பல வழிகளிலும் வஞ்சித்துப் பொருளைப்பறிப்பதையும், பாழாக்குவதையுமே வலுவாகக் கண்டிக்கின்றனர். கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பதென்ன? மக்களுள் வேற்றுமைப் பாராட்டாமை, ஏழைகளைக் காத்தல், உயிர் இரக்கம், வஞ்சனையழுக்காறு இன்மை, பிறவும் ஆகும். இவற்றை மக்கள் எண்ணாது, தாம் நாடோறும் புரியும் தீமைகட்குக் கழுவாயாகக் கடவுளுக்குச் சிறப்புச் செய்து விடுகின்றனர் போலும். இத்தகைய சிறப்புக்களை அவர் எதிர்பார்ப்பதுமில்லை; ஏற்பதுமில்லை. அடியோடு ஒழிய வேண்டும் இம்மனப்பான்மை. நம் நாட்டில் குடிக்கக் கூழின்றி, உடுக்க உடையின்றி, படுக்கப் பாயின்றி, இருக்க இல்லின்றி மக்கள் ஏங்கிக் கிடக்க, இவற்றை நீக்க நினையாது, கடவுளுக்குப் பாலும், தேனும், பழமும் சொரிந்து நீராட்டி மகிழ்கின்றனர். திருவிழாக்களில் வாணவேடிக்கைக்குப் பெரும் பணம் செலவழித்து, காசை கரியாக்கிக் களிக்கின்

(16-ம் பக்கம் பார்க்க)

# திராவிடநாட்டு வியாபாரிகளுக்கு ஓர் வேண்டுகோள்

[காஞ்சிபுரம் **அ. க. தங்கவேலர்.**]

திராவிட நாடு தனி நாடாக வேண்டும் என்ற முரசொலி எங்கும் கேட்கப் படுகிறது. அதற்கென நாள் கொண்டாடி நமது உறுதியைத் தெரிவிக்க வீர இளைஞர்கள் முனைந்தனர்.

பிற கட்சிகளிலே உள்ளவர்கள், குறிப்பாகக் காங்கிரசிலே உள்ள திராவிடர்கள் இன்று இந்தப்பிரச்னையிலே அவ்வளவாக அக்கரைக் காட்டா விட்டாலும், அவர்கள் மனதிலே அடியோடு நல்லெண்ணம் இல்லை என்று கூறிவிட முடியாது. அதிலும், காங்கிரஸ் வேலையாக அடிக்கடி வடநாடு போகவும், அந்த நாட்டுத் தலைவர்களுடன் தொடர்பு கொள்ளவும் அவர்களுக்கு, நம்மைவிட அதிகச்சந்தர்ப்பம் இருக்கிறதல்லவா? முதலிலே அந்தத் தொடர்பு அவர்களுக்குப் பூரிப்பும் பெருமையும் தந்தது. இப்போது? தொடர்பு தொல்லை தருகிறது என்பதை அவர்கள் உணருகிறார்கள். இனி. மேலும் மேலும் உணரத்தான் போகிறார்கள்.

வடநாடு போய் வரும், நம் நாட்டு, காங்கிரஸ் திராவிடர்களிடம் பேசிப்பார்த்தால், விஷயம் விளங்கும். துரைமார்களின் அட்டகாசத்தை மிஞ்சுகிறது வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்களின் போக்கு என்பது, வெளிப்படையாகவே பேசப்படுகிறது.

எதிர்க் கட்சித் தலைவரான நம் பெரியாராலேயே கூட புகழப்படும் அளவு செல்வாக்கு இருக்கிறது ஆச்சாரியாருக்கு. ஆனால் வடநாட்டிலே, அவர் 'விலாசம் தெரியாத' வராகத்தான், இருட்டடிப்புக்கு ஆளாகிக் கிடக்கிறார். அவருக்கு அந்தக் கதி என்றால், எங்கள் பக்கத்து அழகேசனார், மற்றவர்களும், என்ன கதியிலே அங்கு இருப்பார்கள் — நினைக்கும் போதே சிரிப்பு வருகிறது!

இவர்களைவிட, இன்னொரு சாரார், வடநாட்டு ஆதிக்கம் வளர்ந்த வண்ணம் இருப்பதை இப்போது உணருகிறார்கள், அவர்கள் தான் இந்நாட்டு வியாபாரிகள்! அவர்கள் கண்ணிலே இப்போது, தெரிகிற சரக்குகள் எல்லாம், சீமைச் சரககல்ல! வடநாட்டுச் சாமான்கள்! இலாப—நஷ்ட விஷயம், அவர்களுக்குத் தெரியும். எனவே இவ்வளவு சரக்குகளைச் செய்து குவிக்கும் வடநாடு, பொருளாதார பலத்தை எவ்வளவு பெறுகிறது, அதுபோலவே, இங்கு, நமது நாட்டில் வளம் எவ்வளவு பாழாகிறது, வறுமை எவ்வளவு வளருகிறது, என்பது அவர்களுக்குத் தெரிகிறது — பளிச்சென்று. ஏதோ, அந்தச் சரக்குகளை வரவழைத்து விற்பதிலே தங்களுக்குக் கிடைக்கும் இலாபக் கணக்கு ஒரு அளவுக்குக் களிப்பூட்டினாலும், சரக்கு உற்பத்தியாளர்களாக, தொழில் மன்னர்களாக உள்ள வட நாட்டவருக்கு எவ்வளவு இலாபம் குவிகிறது என்ற கணக்கைப் பார்க்கும்போது, அவர்களுக்குக் கவலை பிறவாமல் போகுமா? ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, காஞ்சிபுரத்தில், திராவிடநாடு பிரச்னை கருவிலுருவாகி வரும் பருவத்தின்போது, பிரிவினை மாநாடு கூட்டினேன்—அது சமயம், மாநாட்டுத் தலைவருக்காக, நடைபெற்ற 'ஆள் தேடு படலம்' இன்னமும் எனக்கு நன்றாகக் கவனமிருக்கிறது. எப்படியோ ஒன்று, நடத்தியே தீருவதென்று நடத்தினேன்-அப்போது திராவிட நாட்டு வியாபாரிகளுக்கு, வியாபாரி என்ற உரிமையுடன் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தேன்—அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்னையில் அக்கரை காட்டவேண்டுமென்று-மாநாட்டுத் தலைவருக்கே தான், உதகைமண்டல உச்சியிலிருந்து உள்ளூர் வரையிலே தேடி அலுத்துப்போக வேண்டி இருந்ததே அந்த நாளில், அவ்வித நிலைமையில், வியாபார நண்பர்கள் மட்டும், பிரச்னையிலே அக்கரை காட்டுவது எதிர் பார்க்கக் கூடியதா? அவர்களின் ஆதரவு கிடைக்கவில்லை.

காலம் மாறுகிறது — கருத்து மலருகிறது — இந்த நேரத்தில், அன்று நான் திராவிட நாட்டு வியாபாரிகளுக்கு விடுத்த வேண்கோளை மீண்டும், வெளியிட எண்ணுகிறேன். எனது நண்பர்கள், இதனைக் கண்ணுற்று, திராவிட நாடு தனி நாடு ஆகவேண்டியதன் அவசியத்தை உணருவார்கள் என்று நம்புகிறேன். விரைவில் திராவிட நாடு தனி நாடு ஆக வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை - குறிப்பாக - பொருளாதார பிரச்னைகளை விளக்குவதற்குவியாபாரிகளைக் கூட்டி, ஓர்மாநாட்டின் மூலம் கலந்து பேசவும் யோசித்திருக்கிறேன். இந்த அறிக்கையும் அதற்கான அமைப்பு வேலை என்ற முறையிலே வெளியிடுகிறேன்.

★

வியாபாரப் பெரியோர்களே!

ஒருநாட்டின் வர்த்தகர்கள் அந்நாட்டுச் செல்வம் செல்வாக்குஆகிய சிறப்பின் கர்த்தாக்கள் என்பதையும் வியாபாரிகள் தமதுநாட்டு ஆட்சியை நடத்தும் ஆற்றலும், தமதுநாட்டின் கீர்த்தியை வேறு பலநாடுகளுக்கும் சென்று தங்கும்படி செய்யும்திறமை படைத்தவர்களும் ஆவார்கள்.

வர்த்தகர்களின் மேன்மையும்சிறப்புமே நாட்டை மேலுக்குக்கொண்டு வரும் இயல்புடையதாகும். இன்று உலகிலே மிகப் பெரிய பாகத்தைக் கட்டியாளும் பிரிட்டிஷாரே, ஒரு வியாபாரவர்க்கம். அமெரிக்காவின் அரசியல், வர்த்தகம் பெருங்குடி மக்களிடம் இருக்கிறது.

திராவிட நாடு, தனிநாடாக இருந்துவந்த காலத்தில், வர்த்தகர்கள் இங்கு மன்னர்களின் தோழர்களாகவும், மக்களின் தலைவர்களாகவும், ஏழ்மையை அகற்றுபவர்களாகவும், வேலையில்லாக் கொடுமையை எதிர்ப்பவர்களாகவும் செல்வத்தை உற்பத்திசெய்து வருபவர்களாகவும் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்கள்.

கடலுக்குள் இருந்து எடுக்கும் முத்து முதற்கொண்டு கட்டும்துணி வரையில், திராவிடநாட்டில் வர்த்தகப்பெருங்குடி மக்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று பரப்பிவந்தனர்.

2-ம் பக்கம் பார்க்க

# பிறர் கண்ட காட்சி!

★

ஆதிகாலமுதற்கொண்டு, நாட்டு நலனைப்பற்றிக் கவலைப்படாது, ஒருவர் மீது ஒருவரை மோதவிட்டு இடையே நிற்கையில் தமக்கு என்ன இலாபம் என்பதையே கருத்தில் கொண்டுவந்த பட்டாளம், இங்குஇருந்திருக்கிறது. தேசத்தைக்காட்டிக்கொடுத்த பாதகப் பட்டாளம்; பெரிதும் பஞ்சாங்கப் பட்டாளமாகவே இருந்தது என்பதைப் பண்டைச் சரித்திரத்திலிருந்தே தருகிறோம்.

கிரேக்கவீரன் அலெக்சாண்டர் இந்தியாமீது படை எடுத்தான். சில இடங்களைப் பிடித்தான். பலவற்றை ஏதும் செய்யாது விடுத்தான். புயல் அடித்து ஓய்வதுபோல அலெக்சாண்டரின் படைஎடுப்பும் போய்விட்டிருக்கும். அந்த நாட்களில் சிந்துவில் மோசிகானுஸ் என்றொரு மன்னன் இருந்தான். அவனுடைய நாட்டு மக்கள் 130 ஆண்டு வரை வாழுபவராம். அந்த நாட்டை அலெக்சாண்டர் ஏதும் செய்யாது விடுத்தான். ஆனால் அங்கிருந்த பார்ப்பனனை மோசிகானுசுக்குத்தூபமிட்டுஅவனை, அலெக்சாண்டர்மீது மோதவிட்டனர். பிறகு மொசிகானுஸ் முறியடிக்கப்பட்டான். அந்த நாடு அலெக்சாண்டர் கை சென்றது.

நந்த பரம்பரையினர், 9 மன்னர்கள் இருந்தனர். இந்நாட்டில் அவர்கள், பார்ப்பனீயத்துக்கு எதிரிகளாக இருந்தனர் என்பதற்காக, அந்தக்காலத்துப் பஞ்சாங்கப் பட்டாளம், ஐந்தாம் பட்டாளத்து வேலையைச் செய்தது. அந்த மன்னர்கள் அறிய ஒட்டாதபடி தடுத்து சூது செய்தனர். அத்துடன் விட்டனரா! இல்லை. அவர்களில் கடைசி நந்தன் ஆண்ட காலத்தில், அந்தப்பரம்பரையையே கவிழ்த்துவிட, சதிசெய்து சந்திரகுப்தர் என்பவரைக் கிளப்பிவிட்டு, அவரைக்கொண்டு அலெக்சாண்டருக்கும் தூது விடுத்தனர். பின்னர் அதே சந்திர குப்தனைக் கொண்டு, நந்தனை வீழ்த்தினர். இந்தச்சதிக்கு-பாதகத்துக்கு சந்திர குப்தனைத் தூண்டிவிட்டு, உடந்தையாக இருந்தது யார்? சாணக்கியர் அல்லது கௌடல்யர் என்ற பெயர் பூண்ட பார்ப்பனர்.

நவ நந்தர்கள் செய்த குற்றம் என்ன? எதற்காக அவர்கள் கவிழ்க்கப்பட்டனர்? நந்தர்கள் சூத்திரர்கள் எனவே அவர்கள் ஆளக்கூடாது. ஆண்டால் தமது வகுப்புக்கு ஆதிக்கம் இராது என்ற சுயஜாதி நோக்கத்துடனேயே தக்ஷீலத்துப் பார்ப்பனன் கொடல்யன்கிரேக்கநாட்டு மன்னன் அலெக்சாண்டரைக் கொண்டு நந்த மன்னனைத்தோற்கடிக்கவேண்டுமென்று முனைந்தான். அதற்காக சந்திரகுப்தனை கருவியாக்கிஅவனைக் கொண்டு அலக்சாண்டருக்கு இந்த நாட்டைக் காட்டிக்கொடுக்கத் துணிந்தான். நந்தர்கள் வெகு சிறப்பாக வாழ்ந்தவர்கள் பலம் பெற்றவர்கள். மகாபத்ம நந்தன் என்னும் முதல் அரசன் 20000 குதிரைப் படை, 20000 காலாட்படை, 4 குதிரைபூட்டிய ரதங்கள் 2000, போரிடும் யானைகள் 3000 என்ற அளவுக்குப் படை பலம் அமைத்தான். 99 கோடி தங்க நாணயமிருந்ததாம் அந்த நாட்டு பொக்கிஷத்தில். பணம், படை இவ்வளவையும் ஒரு பார்ப்பனன் தனது ஐந்தாம் பட்டாள வேலையால் அழித்து விட்டான். இது சரிதமாயிற்றே!

மற்றொரு சமயம், இதே பஞ்சாங்கப் பட்டாளம் புஷ்யமித்திரன் என்பானுக்கு ஒரு பார்ப்பனத்தியைப் பெண்டாகத்தந்து அவனைக்கொண்டு மௌரிய மன்னரை அழித்தனர்.

அதாவது, எந்தச் சந்திரகுப்த மௌரியாவை நந்தருக்கு விரோதமாகக் கிளப்பிவிட்டு, மன்னராக்கினரோ, அதேமௌரியமன்னன் பரம்பரையைச் சேர்ந்த பிரகத்திரத மோளரியா எனும் மன்னர் ஆண்ட போது, அவனுடைய சேனாதி பதியாகிய, புஷ்யமித்திரன் என்பவனை, பெண் கொடுத்துத் தமதாள் ஆக்கிக் கொண்டு, பிரகத்திரத மன்னன், தன் துருப்புகளின் அணிவகுப்பைப் பார்வையிட்ட போது, அவனைக்கொல்ல வைத்தனர்! டஷ்யமித்திரன் கொலைக் கரத்துடன், செங்கோலை எடுத்தான். ‘‘ஜயவிஜயீபவ. சகல சம்பன்ன சித்திரஸ்து’’ என்று பார்ப்பனர் அவனை ஆசீர்வதித்தனர். அவனும், பார்ப்பனீயத்துக்கு வேண்டிய அளவு ஆதரவு தந்தான். பிறகுஇந்த மன்னனின் பரம்பரையாக சுங்க மன்னபரம்பரை ஆண்டு வந்தது. அதிலே பத்தாவது மன்னன் தேவபூதி இவன் காலத்தில் பஞ்சாங்கப்பட்டாளம் வேலை செய்து தான், இவனது மந்திரியாக இருந்த வாசுதேவனைமன்னராக்கிற்று. இந்தக் கோரச் செயல், மிகச் சோககரமானது.

தேவபூதி எங்ஙனம் கொல்லப்பட்டான்? வாசுதேவனுக்குப் பதவி மோகம் உண்டாகும்படி பஞ்சாங்கப் படை செய்தது. சதி நடந்தது. தேவபூதியின் மகள் அரசிளங்குமாரி ஒருத்தியிருந்தாள். அவளுடைய பணிப்பெண் ஒருவளுக்கு, தேவபூதியின் தேவிபோல் வேடம் போட்டு, தேவபூதியிடம் அனுப்பினர். அந்த மாயா தேவி, பணிப்பெண், மன்னனைக் கொன்றாள். உடனே வாசுதேவன் மன்னனானன். பூசுரர்கள்வேதமோதி, பூஜைசெய்து, புதிய மன்னரின் புகழ் பாடி விட்டனர். இவனும் இவனுக்குப்பிறகு ஆண்ட மூன்றுபேரும் பார்ப்பனருக்கு, சலுகைகள் பலப்பல செய்தனர். உண்டு களித்துப்பட்டாளம் வாழ்த்தது. தமது சுபநலத்துக்காக வேண்டிய, இத்தகைய எத்தனையோ துரோகங்களை, காட்டிக் கொடுக்கும் தொழிலை, ஐந்தாம் பட்டாள வேலையை, பஞ்சாங்கப் பட்டாளம் செய்திருக்கிறது. சரிதத்தில் இதனைப் பட்டப்பகல் போல் காணலாம்.

இந்நாட்டில் எந்தெந்தமனன்ர்கள், தமதுசுயஜாதிக்கு சலுகைகள் அதிகமாகக்காட்ட மறுத்து, சமநீதி, சம உரிமை, தந்து வந்தனரோ, அவர்களை எல்லாம் கவிழ்த்தவர்கள், மீர்ஜாபர்களல்ல! பார்ப்பனர்தான்.

இந்தியா கண்டத்தில், ஒரு சிறந்த அரசராகவாழ்ந்த ஹர்ஷர்(Harsha) புத்த மதத்தைச்சற்று ஆதரித்தார். பௌத்தம் பரவினால், மக்கள் வாழ்க்கையில், மூடப்பழக்கவழக்கம் ஒழியும் எனக் கருதினார். உடனே பார்ப்பனருக்கு, ஹர்ஷர் மீது துவேஷம் உண்டாகி விட்டது. ஹர்ஷரைக் கொன்றுவிட, இந்தத் துரோகிகள் சதி செய்தனர்.

ஹர்ஷர் கங்கைநதிக்கரையிலுள்ள கனோஜ் என்ற இடத்திலே, சகலமதக்காரரின் மாநாடு ஒன்று கூட்டினர். அதற்குப் புத்த மதக்காரரும் ஆரிய மதக்காரரான பார்ப்பனரும் பிறரும் வரவழைக்கப்பட்டனர். அவரவர்தத் தமது மதக் கோட்பாடுகளை எடுத்து விளக்கவே அம்மாநாடு நடந்தது. அங்கு 100 அடி உயரத்தில் ஒரு மேடை எழுப்பி அதன் மீது புத்த

விக்கிரகம் அமைக்கப்பட்டது. அரசர்கள் பலரும் கண்டு அஞ்சும் சக்கிரவர்த்தி ஹர்ஷர், அழகிய அந்த கங்கைக் கரையிலே, கூடாரமடித்து அங்கு கூடிய அறிவாளிகள் அளிக்கும் அறிவு விருந்தை உண்டுகளித்தான். அதே நேரத்தில், தமக்கு ஏக போக பிராசு தராமல், பௌத்தர்களையும் ஓரளவுக்கு ஆதரிக்கும், ஹர்ஷரைக் கொன்றுவிட வேண்டுமென்று, பார்ப்பனர்கள் துணிந்து விட்டனர். தம்மைக் காத்து ரட்சித்த மன்னனுக்குத் 'துரோகம் செய்ய, சதி செய்யலாயினர்.

கங்கை நதிக்கரையில், களிப்போடு உலவிக்கொண்டிருந்த மன்னனின் கண்களில் மருட்சிஉண்டாகும் படியான விதத்தில், புத்த மடத்தை பார்ப்பனர்கள்கொளுத்தி விட்டனர். அதேபோது, ஒரு பார்ப்பனன் கட்டாரிகொண்டு ஹர்ஷனைக்குத்திக் கொல்ல வந்தான். கொலையாளி, பிடிக்கப்பட்டான். மன்னன் விசாரித்தான். பிறகுதெரிந்தது பஞ்சாங்கப் பட்டாளத்தின் சதி. பார்ப்பனர்கள் தான் புத்தமடத்தைக் கொளுத்தியதுடன் தன் உயிருக்கே உலையும் வைக்கத் துணிந்தனர் என்பது. 500 பார்ப்பனர்கள் இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டனர். பார்ப்பனர்களில் பலர் கடுந்தண்டனை பெற்றனர்.

அசோகர் காலத்தில்,பார்ப்பனீயத்துக்கு ஆட்டம் கொடுத்து விட்டது. இதுபார்ப்பனருக்குபதைப்பைக்கொடுத்தது. அவரது காலத்தில் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆனால் அசோகருக்குப்பிறகு தோன்றிய அவரது சந்ததியாரை,மெல்லமெல்லச்சிதைத்தனர். பார்ப்பனர்களின் செயலால்தான் அசோகரின் சந்ததியின் ஆட்சி அழிக்கப்பட்டது. இதற்குக் காரணம் அசோகர் காலத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைப் பெருக்கக்கூடிய ஆரியமதத்தை வளர்க்கவில்லை. மக்களுக்கு உண்மையான மார்க்கம் ஒழுக்கம் முதலியன போதிக்க தர்ம மகாமந்திரர்கள் என்பவர்களை நாடெங்கும் அசோகன் அனுப்பி வைத்தான்.பார்ப்பனரைபூதேவர்கள் என்று மதிக்க மறுத்தான். சட்டம் சகலருக்கும் சமமான முறையில் வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தான். இதன் பயனாகப் பார்ப்பனருக்குச் செல்வாக்குப் போய்விட ஆரம்பித்தது.

எனவே அவர்கள் அசோகர் கண் மூடியதும், மெல்ல மெல்லச் சதி செய்து அந்தப் பரம்பரையினரை அழித்தொழித்தனர். அந்நாளில்பஞ்சாங்கப் பட்டாளம் செய்த துரோகம், நாட்டைக் காட்டிக்கொடுத்த சேதிகள் பலப்பல. நாட்டைக் காட்டிக் கொடுக்கும்படை,ஐந்தாம்பட்டாளம் அத்தகைய பஞ்சாங்கப் பட்டாளமாகஇருக்கமுடியுமேதவிர,வேறாக இருக்க முடியாது. மராட்டிய மன்னன் சிவாஜியின் பரம்பரை அழிந்தது பீஷ்வாக்கள் என்னும் பார்ப்பனரால். மைசூர் சதிக்குக் காரணம் பூர்ணயா என்ற பார்ப்பனர். 1799ம் ஆண்டு மே மாதம் 12ந் தேதி மைசூர் திவானாக இருந்த பூர்ணயா என்ற பார்ப்பனர் வெள்ளைக்கார ஜெனரல் ஹாரிஸ் (Harris) என்பவரிடம், ஒப்பந்தம் பேசிக்கொண்டசேதி, மைசூர் சர்க்கார் வெளியிட்டிருக்கும் மைசூர் கெஜட்டியர்,வால்யம்2, பாகம்4, டக்கம் 2703ல் இருக்கிறது. அசோகர் காலத்திற்குப் பிறகு நடந்த பார்ப்பனச் சதியை, மகா மகோபாத்தியாய ஹரிஹர சாஸ்திரி எழுதியுள்ள புத்தகத்திலும், சிவாஜி பரம்பரையை பீஷ்வாக்கள் அழித்ததை ஆசிரியர் ஜதுநாத் சர்க்கார் எழுதியுள்ள சரிதத்திலும், ஹர்ஷர் முதலியவர்கள் காலத்திலும் அதற்கு முன்னரும், பஞ்சாங்கப்பட்டாளம் நடத்திய சதிகளை, பார்கீதர், ஹேமசந்திரராய் சௌத்திரி,வின்சன்ட்ஸ்மித், முதலியோர் எழுதியுள்ள சரிதங்களிலும், காணலாம்.

சரித்திரத்தில் இங்ஙனம், படலம் படலமாக,இந்த நாட்டிலே துரோகச் செயல் செய்தவர்கள்யார் என்பது, ஐந்தாம் பட்டாளம் எது என்பது விளக்கப்பட்டிருக்க, ஏன் யார் நாட்டைக்காட்டிக் கொடுப்பவர்களோ என்பதில் சந்தேகம் தோன்றவேண்டும்?

கடந்த ஜெர்மன் சண்டையின்போது ஜெர்மனிக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கத் துணிந்து, கெய்சருக்குக் கடிதம் ஒருவர் விடுத்தார், காஞ்சீபுரத்திலிருந்து. அவரும் ஒரு பார்ப்பனர்?

இப்போது கூறட்டும், எது ஐந்தாம், பட்டாளம் என்பதை! சரித்தை சுபாவத்தை, பழக்கத்தைச் சான்றாக வைத்துக் கொண்டு கூறப்படும்யார்நாட்டைக் காட்டிக்கொடுப்பவர்கள் என்பதை!!

[மயிலை. ஈ. முனிசாமி.]

13-ம பக்கத் தொடர்ச்சி

றனர். கோவில்களில் கடவுளுக்குத் தளிகையிடும் தமிழர் ஆரியர் வயிறு புடைக்க உண்பதையும், தமிழர் பார்த்து நிற்பதையும் தவிர வேறு என்ன கண்டனர்? மஞ்சள் ஆடையுடுத்தித் தெருத் தெருவாகச்சுற்றிக் காசையும் ஆபரணங்களையும் காணிக்கையாக அள்ளி உண்டியில் இடுகின்றனர். இதனின்று சில அறிஞரும் இப்பகுத்தறிவுக் காலத்தில் விடுபட்டாரில்லை. ஓர் ஆரியராவது இச்சீர்த் திருத்தமற்ற செயலை மேற்கொள்வதைக் கண்டிலோம். தம் வரவுக்கு வழிகோலிக் கொண்டு சமயப் பற்றால் செய்யும் பயனற்ற செலவுகளைச் செய்யாமல் சிக்கன முறையைக் கையாளுவதாற்றான் ஆரியர் செல்வந்தராய் நாளுக்குநாள் உயர்வடைகின்றனர். அஃதில்லாமையால் தமிழர் சீர் கேடுற்று வறிஞராய் வாடுகின்றனர்.

கடவுளுக்கும் நமக்கும் இடையே தரகர் வேண்டுவதில்லை. கோவில்களில் நம்பிக்கையுள்ளவர் தாமே சென்றுதேங்காய்உடைத்துத்தமிழ்ப் பாக்கள் இசைத்துக் கடவுளைத் தொழல் சாலச்சிறந்த முறை. செத்த மந்திரத்தைச் செப்புவதற்குப் பணத்தைத் தந்து மன நிறைவு கொள்ளுதல் தகாது. இச்சூழ்ச்சியினின்று தப்பி எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும். கோவில்களில் கோடிக் கணக்கான பொற்காசுகள் மதிப்புள்ள நகைகள் ஒரு பயனுமின்றி ஆலய இருப்புப் பெட்டிகளில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. ஆலய அதிகாரிகள் பல துறைகளில் கிடைக்கும் வருவாயை ஏழை மக்கள் விடுதிச் சாலைகட்கும், தாழ்த்தப்பட்டார் நலனுக்கும், மருத்துவச் சாலைகட்கும், தமிழ்க் கல்விச் சாலைகட்குமாயினும் பயன்படும்படித் திட்டம் வகுக்கின்றனரா? அதுவுமில்லை. தமிழர் அறப் பணத்தில் ஆரியருக்கு மறை பயிலும் பள்ளிகள் உண்டாக்கி, அன்னமிட்டு மேலும் ஆக்கம் அளிக்கின்றனர்; பாம்புக்குப் பால்வார்த்து வளர்ப்பது போல! —

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram.